விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 19 செவ்வாய்க்கிழமை (03.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

## இன்னும் நீதி கிடைக்கவில்லையே!



23ஆம் பக்கம் பார்க்க....

## பலசவால்கள் இருந்தாலும் தொடர்ந்து நானே பிரதமர்

### ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
பல சவால்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் தானே தொடர்ந்து பிரதமராக செயல்படப் போவதாக பிரதமர்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசிற்கு எதிராக அம்பாந்தோட்டையில் 500 இற்கும் மேற்பட்ட பிக்குகள் பேரணி



23ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை மக்கள் காணிகளை மீட்க வெளிநாட்டவர்களுடன் போராட்டம்!

## சீனாவை நேரடியாக எதிர்க்கும் மகிந்த



(கொழும்பு)
இலங்கை மக்கள் தமது காணிகளை மீட்டெடுக்க வெளிநாட்டவருடன் போராட வேண்டி ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எம்பிலிப்பிட்டிய ஆனந்த போதி விகாரையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## 51 தமிழக மீனவர்களை விடுவிக்க அரசு இணக்கம்

(கொழும்பு)
கொழும்பில் நேற்று நடந்த இரு நாட்டு அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் இலங்கை சிறையில் உள்ள 51 தமிழக மீனவர்களை விடுவிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.
தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக 'இந்திய-இலங்கை அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை கொழும்பு நகரில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில்

23ஆம் பக்கம் பார்க்க....

## நல்லிணக்கத்துடன் வாழவே வடக்கில் விரும்புகின்றனர்

### அமைச்சர் எஸ்.பி எடுத்துரைப்பு

(கொழும்பு)
கடந்த காலத்தில் பல்வேறு சீர்குலைப்பு செயற்பாடுகளில் கடும்போக்காளர்கள் ஈடுபட்டனர். அவர்கள் என்ன கூறினாலும், வடக்கு - கிழக்கு மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## போதைப்பொருள் உலகிற்கே சவால்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)
போதைப்பொருள் மற்றும் தொற்றா நோய்களால் முழு உலகமும் சவாலை எதிர்நோக்கி வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த தலைமையில் தேர்தல்களை சந்தித்து வெற்றி பெறுவோம்

### பீரிஸ் நம்பிக்கை

(கொழும்பு)
முழு நாடும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கோருவதாகவும் எதிர்வரும் தேர்தல்களில் அவரது தலைமையில் போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் முன்னாள்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஓமந்தையில் கிணற்றிலிருந்து தாயும் மகனும் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா, ஓமந்தைப் பகுதிலுள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து தாயும், மகனும் நேற்ற நண்பகல் 12 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,
வவுனியா, ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் வீதியில் அமைந்துள்ள வீட்டுக கிணற்றிலிருந்து இளம் தாய் ஒருவரும் அவரது 7 வயது மகனும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.
குறித்த வீட்டில் வசித்து வந்த தாயின் மாமியார் கிராம அலுவலர் அலுவலகத்திற்கு சென்றுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## வேலைவாய்ப்பு வழங்கக்கோரி முன்னாள் போராளிகள் திரள்வு




09ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்.வரும் ஜனாதிபதிக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடிய தீர்வினை முன்வைக்காமல் யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி வருகை தந்தால் அவருடைய பயணத்தில் இடையூறு ஏற்படும் அளவிற்கு எமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
நாளை மறுதினம்" மட்டுமே ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு மகிழ்ச்சியான பயணத்தினை மேற்கொள்ளும் இறுதித் தருணமாக இருக்

24ஆம் பக்கம் பார்க்க....

## தூக்கில் தொங்கிய நிலையில் முன்னாள் போராளியின் சடலம்



(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரியில் முன்னாள் போராளியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஜனநாயக போராளிகள் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளரான இனியவன் என அழைக்கப்படும் த.ரிசிகரன் (வயது 34) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே

24ஆம் பக்கம் பார்க்க....

### நுண்கடன் நெருக்கடி

## 3 பிள்ளைகளின் தாய் தற்கொலை

(கொழும்பு)
நிறுவனங்களில் பெற்றுக்கொளளப்பட்ட நுண் கடனை திருப்பிச் செலுத்த முடியாது மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.
-இச் சம்பவம் நேற்று இடம்பெறறது. முல்லைத்தீவு விசுவமடு இளாங்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டத்தை வளைக்கிறார் பிரதமர்

## வாசுதேவ எம்.பி. குற்றச்சாட்டு

இலங்கையின் சட்டத்தின் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமர்ந்திருப்பதாகவும், அனைத்து சட்ட செயற்பாடுகளும் அவருக்கு தேவையான வகையிலேயே முன்னெடுக்கப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் சட்டத்தை பிரதமர் தனது கைகளில் வைத்திருப்பதால், நாட்டில் சட்டம் செயற்பாட்டில் இல்லை. மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர விவகாரம் குறித்து சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் 6 மாதங்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று பொலிஸ் திணைக்களத்தை பிரதமரே வழிநடத்தி வருகிறார். டில்ருக்ஷி விக்ரமசிங்க பணிப்பாளராக பணியாற்றும் போதும் இலஞ்ச ஆணைக்குழுவையும் பிரதமரே வழிநடத்தி வந்தார். பிரதமருக்கு தேவையான வகையிலேயே இந்த இடங்களில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் சுயாதீன ஆணைக்குழுக்கள் எனக் கூறினாலும் அவற்றில் சுயாதீனம் இல்லை. இதற்கான நியமனங்கள் முற்றாக அரசாங்க தரப்பிலேயே வழங்கப்படுகின்றன என்பதே இதற்கு காரணம்.

52 பேரைக் கொண்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியினருக்கு அரசியலமைப்பு சபையில் பிரதிநிதித்துவம் இல்லை. இதனால், ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்தில் எங்களது பங்களிப்பு இல்லை. அரசாங்கத் தரப்பிலும் அரசாங்கத்தின் எதிர்க்கட்சியுமே உறுப்பினர்களை நியமிக்கின்றன.

பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகின்றது. எனினும் எந்த பிரயோசனமும் இல்லை. பொலிஸ் திணைக்களம் ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்படுவதில்லை என குறிப்பிட்ட வாசுதேவ நாணயக்கார,

இந்தியாவுடன் செய்து கொள்ள உள்ள எட்கா உடன்படிக்கைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-11)

# சவாரி மாட்டை இறைச்சியாக்கிய மூவர் விளக்கமறியலில் வைப்பு

வட்டுக்கோட்டை பகுதியில் சவாரி மாட்டை இறைச்சியாக்கிய 3 நபர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதவான் ரி.கருணாகரன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் தேடி வந்துள்ளனர். குறித்த நபர் நேற்று முன்தினம் அதிகாலை வட்டுக்கோட்டை தெற்கு பகுதியில் நிற்பதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில் அப்பகுதியில் உள்ள அவரது வீட்டை பொலிஸார் சுற்றி வளைத்து வீட்டினுள் சென்ற போது அங்கே இரு நபர்கள் மாடொன்றினை வெட்டி இறைசசியாக்கிக் கொண்டிருந்ததனை அவதானித்துள்ளனர். அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் தேடிவந்த பிரதான சந்தேக நபர அப்பகுதியல்இருந்து சற்று முன்னர் வெளியேறியதை அறிந்த பொலிஸார் கைது செய்யப்பட்ட நபர்களின் தொலைபேசியின் ஊடாக அவருக்குரிய இறைச்சிபங்கை பெற்றுக்கொள்ள வருமாறு கூறி சந்தேக நபர் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இதேவேளை அப்பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட மாட்டினை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யபட்டிருந்து.

குறித்த சந்தேகநபர்கள் மூவரும் நேற்றைய தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-9)


**வேலையாட்கள் தேவை**

**யாழ்.நகரில் இயங்கும் லைடன் புடவை நிலையத்துக்கு விற்பனையில் அனுபவமுள்ள மற்றும் பழகவிரும்பும் இரு பெண் பிள்ளைகளும் வர்த்தகம் படித்த ஆங்கிலத்தில் கணக்குச் செய்யக்கூடிய பெண் கணக்காளர் ஒருவரும் தேவை.**

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**லைடன் புடவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-7065)



**காரைநகர்**

**கிழவன்காடு கலாமன்றம்**

நடத்தும்

**தெய்வீகக் கலைவரங்கு**

இடம் - கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் - 05.01.2017 வியாழக்கிழமை மாலை 5.00 மணி

நிகழ்ச்சி நிரல்

* வேதபாராயணம் – தென்னிந்திய மற்றும் ஈழத்து வேதவிற்பன்னர்கள்
* திருவாசக ஓதல்
* இசைக் கச்சேரி
* சொற்பொழிவு - 'இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்'

வழங்குபவர் : - பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா (வதிவிட ஆச்சாரியார், சின்மியாமிஷன், யாழ்ப்பாணம்)

* புஸ்பாஞ்சலி * மிருதங்க இசை * அரங்க ஆற்றுகை

சிறப்புப் பட்டிமண்டபம்

**திருவாசகத்துள் விஞ்சி நிற்பது**

தத்துவ அறிவே!
திரு. செ. செந்தூர்செல்வன்
திரு. T. கருணாகரன்
திரு. இ. சர்வேஸ்வரா

பக்தி உணர்வே!
திரு. வே. சிவராசா
திரு. பரா. றமேஸ்
திரு. ந. ஐங்கரன்

நடுவர்– சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்

குறிப்பு:- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ்.கிளையிலிருந்து இல.11, 1வது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (உதயன் பணிமனை அருகில்) பி.ப.4.15 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-7066) கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.


# மகிந்தவுக்கு எதிராக சட்டநடவடிக்கை; பொது பல சேனா அமைப்பு எச்சரிக்கை

முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொது பல சேனா அமைப்பு நேற்று அறிவித்தது.

இதுதொடர்பிலான அறிவித்தலை அவருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை சட்டத்தரணிகளுடன் ஆராய்ந்து வருவதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொது பல சேனா தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அதன் தேசிய அமைப்பாளரான டிலாந்த விதானகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, முன்னாள் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தினால் தமது அமைப்புக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டினார். (இ-11)

# பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பழிவாங்கல் ரீதியிலான இடமாற்றம்

## யாழ். பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு பழிவாங்கல் ரீதியான இடமாற்றம் வழங்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ள யாழ். மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கம், இவ்வாறான இடமாற்றங்களால் உயிரிழப்புக்கள் கூட ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்படுகின்ற வருடாந்த இடமாற்றம் இடமாற்ற கொள்கைகளுக்கு முரணாகவும், தாபன விதிக்கோவைகளுக்கு புறம்பாகவும் வழங்கப்படுவதாக கூறி கடந்த வருடம் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த போராட்டம் குறித்து தெளிவுபடுத்தும் பத்திரிகையாளர் சந்திப்பொன்று யாழ். சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. இதன் போதே யாழ். மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் க. சதீஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அநீதியான முறையில் வழங்கப்படுகின்ற இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். 2014இற்கு முன்னர் சீரான முறையில் வழங்கப்பட்டு வந்த இடமாற்றம், 2015 இற்கு பின்னரான காலப்பகுதியில் முறையற்ற வகையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இடமாற்ற சபையினால் கடந்த வருடம் இடமாற்ற கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டது. பின்னர் அதே வருடத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கென தனியான இடமாற்ற கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டது. இது எந்த மாகாணத்திலும் இல்லாத நடைமுறையாகும்.

இடமாற்ற கொள்கை ஒன்று தயாரிக்கப்படும் போது சம்பந்தப்பட்ட தொழிற் சங்கத்தின் ஆலோசனை பெறப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆனால் இங்கு இந்த நடைமுறை பின்பற்றப்பட்டாலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் நலன்களை கருத்திற் கொள்ளமலும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் இடமாற்றம் வழங்கப்படுகின்றது.

யுத்த காலத்திலும் அதற்கு பின்னரும் சிறந்த முறையில் கடமையாற்றி பெரிதளவில் நோய் பாதிப்புக்கள் எவையுமின்றி பொதுமக்களை பாதுகாத்த பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தற்போது அரசியல் பழிவாங்கல் நோக்கங்களோடு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். வெளி மாவட்டங்களுக்கு கடமைக்கு செல்கின்றவர்கள் குறித்த காலப்பகுதிக்கு பின்னர் தமது சொந்த மாவட்டத்திற்கு திரும்புவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் புதிய இடமாற்றத்தின் படி 10 வருடங்களுக்கு மேல் சொந்த மாவட்டத்தில் கடமையாற்றியவர்கள் கட்டாயம் வெளி மாவட்டத்துக்கு செல்ல வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர பாதிக்கப்படுபவர்கள் மேன்முறையீடு செய்யும் உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. இது உத்தியோகஸ்தர்களின் மனநிலையை பாதிக்கும் நடவடிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)


**ஊர்க்கோழிகள் விற்பனைக்கு**

**2 மாத ஊர்க்கோழிக்குஞ்சு, விறாத்து சேவல்கள், கோழிகள் விற்பனைக்கு உண்டு.**

**1 நாள் ஊர்க் கோழிக் குஞ்சுகளை முற்பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.**

**076 348 8645** (7358)



ஆத்மசாந்தி பிரார்த்தனை



(7058)

எமது பெருமதிப்புக்குரிய

கலாநிதி ஆறு. திருமுருகன்

அவர்களின் தாயார்

பரமபதமடைந்த

**திருமதி**

**சரஸ்வதி ஆறுமுகம்**

அவர்களின் ஆன்மா இறைநிழலின் புற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

**இந்து வாலிபர் சங்கம்**
**வட்டுக்கோட்டை**
**கொழும்பு கிளை**
**கனடா கிளை**

# மகிந்த காலத்து ஊழல்களை கண்டறிய குற்றவியல் மத்தியஸ்த ஆணைக்குழு!

## அமைச்சர் அமுனுகம தகவல்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளைக் கண்டறிவதற்கு குற்றவியல் மத்தியஸ்த ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக விசேட வேலைத்திட்டங்களுக்கான அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பான பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. பொதுமக்களின்பணத்தை சூறையாடியவர்களிடமிருந்து அந்தப் பணத்தை பறிமுதல் செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கையின் சட்டத்தில் இல்லை.

குற்றவாளிகளாக இனங்காணப்படுகின்றவர்களுக்கு சிறைத் தண்டனையுடன் தண்டனைகள் நிறைவேற்றப்படுகின்றன.

எனினும் அவர்களால் சூறையாடப்பட்ட பொதுமக்களின் பணம் மீளப் பெறப்படுவதில்லை.

எனவே மக்களின் பணத்தை பறிமுதல் செய்வதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் அமுனுகம மேலும் தெரிவித்தார். (இ-3)

## அம்பாந்தோட்டை சீனாவுக்கு; தீவிர கண்காணிப்பில் மைத்திரி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவது தொடர்பில், கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட பிரதிநிதி ஒருவரை ஜனாதிபதி நியமிக்கவுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் சீனாவின் சைனா மெர்க்கன்டைல் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திற்கு இடையில் கையொப்பமிடவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை தயாரிக்கும் குழுவில் ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதி ஒருவரை பெயரிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கொள்கை கற்கை நிறுவனத்தின் உறுப்பினரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொருளாதார ஆலோசகருமான பேராசிரியர் சரத் ராஜபத்திரன இந்த குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவில் மேற்கொள்ளும் தீர்மானம் தொடர்பில் மிகவும் விரைவில் ஜனாதிபதி தகவல் பெற்றுக்கொள்வதே நோக்கமாகும்.

துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் 7ஆம் திகதி கையொப்பமிடவுள்ள போதிலும் அது தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சீனாவின் இலங்கை தூதுவர் யீ ஷியென்லினுக்கு இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மகிந்த அமரவீர பதவி விலகத் தீர்மானம்?



மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மீன்பிடித்துறை அமைச்சர் பதவியை துறக்கத் தீர்மானித்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த அமரவீர ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார் .

அண்மையில் அமைச்சில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போது இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

"நான் மீன்பிடித்துறை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யவுள்ளேன். எனக்கு தொடர்ந்தும் அமைச்சில் பதவி வகிக்க முடியாது. அமைச்சின் சில அதிகாரிகளுடன் என்னால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது. பணிகளை ஆற்றக்கூடிய வகையில் அவர்களின் ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. எனக்கு சேவையாற்ற வேறு ஓர் அமைச்சினை தருமாறுஜனாதிபதியிடம் கோர உள்ளேன்.

தொடர்ந்து மீன்பிடித் துறை அமைச்சராக பணிகளை முன்னெடுக்குமாறு பிரதி அமைச்சர் திலிப் வெதாராச்சியிடம், அமைச்சர் மகிந்த அமரவீர கோரியுள்ளார். (இ-3)

## மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

வறிய பாடசாலை மாணவ, மாணவியருக்கு இலவச மதிய உணவு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வறுமையில் வாடும் பாடசாலை மாணவ,மாணவியருக்கு இலவசமாக காலையில் பாலும் மதியம் உணவும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கொழும்பு ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவ, மாணவியருக்கான புதிய காப்புறுதி திட்டமொன்று அமுல்படுத்தப்பட உள்ளது.தனியார், அரச பாடசாலைகள் என பேதம் பாராட்டாது அனைத்து பாடசாலை மாணவ மாணவியருக்கும் மருத்துவ காப்புறுதி வழங்கப்படவுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் ரூபா வரையிலான காப்புறுதி தொகை வழங்கப்படவுள்ளது.

காப்புறுதி வழங்குவதற்காக இந்த ஆண்டில் 2700 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வறிய பாடசாலை மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் காலணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வசதிகள் குறைந்த 1500 பாடசாலைகளுக்கு மின்சாரம், நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க கல்வி அமைச்சிற்கு 7000 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

## செவ்வாய்க்கிரகத்தில் வீடுகள்

செவ்வாய்க் கிரகத்திற்கு செல்லும் விண்வெளி வீரர்கள் ஆய்வினை மேற்கொள்வதற்காக விசேட வகையிலான இருப்பிடங்களை உருவாக்குவதற்கு நாசா திட்டமிட்டுள்ளது.

விண்வெளி வீரர்கள் விண்வெளியில் ஆய்வுகளை மேற்கொள்ளும் போது சுற்றுப்புற காரணிகளால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

மேலும் செவ்வாய் கிரகத்தில் அதிகமான வெப்ப நிலை, மற்றும் ஆஸ்மிக் கதிர்வீச்சு என்பவற்றையும் தடுக்க வேணடியுள்ளது.

எனவே விண் வெளி வீரர்களுக்கென பிரத்தயேகமாக டோனட் குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தை தீவிரப்படுத்தவுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது. (இ-7)

## அரிசி விலையை அதிகரிக்கக்கூடாது!

### அரசிடம் சம்பந்தன் கோரிக்கை

அரிசி விலையை நினைத்த நினைத்தவாறு அதிகரிக்க இடமளிக்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று சம்பந்தனிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசி விலை உயர்வினால் பொதுமக்கள் மிகவும் நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். ஒவ்வொரு காரணங்களைக் கூறிக்கொள்ளாது அரிசி விலையை குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன்று சில மாகாணங்களின் நெல் வயல்களில் என்ன நடக்கின்றது என்பது பற்றி ஆராய வேண்டும். நெல் வயல்களை மண் கொண்டு நிரப்பி கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

இதன் காரணமாக விவசாய் நிலங்களில் விவசாயம் மேற்கொள்ளப்படுவதில்லை. அந்தந்த பகுதிகளில் நெல் வயல்கள் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (இ-3)

## 2 கோடி ரூபாவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளுடன் பாகிஸ்தானியர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 2 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மறைத்து வைத்த நிலையில் அவர் ஹெரோயின் போதைப்பொருளை கடத்தி வர முற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரஜையிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் சந்தைப்பெறுமதி 2 கோடி ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியுடன் ஜனாதிபதி மைத்திரி விசேட சந்திப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பு எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு மாநாட்டிற்கு முன்னதாக இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இலங்கை எதிர்நோக்கியுள்ள மிக முக்கிய சவால்கள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டின் போது கலந்துரையாடப்படவுள்ளது.

எனினும், இலங்கையின் யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் அமெரிக்காவின் இணை அனுசரணையில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இரத்து செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்த கடிதம் ஒன்றை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தென்னாபிரிக்கா சிறந்த ஆரம்பம்

## எல்கர் சதம்



இலங்கை அணிக்கெதிரான 2-வது டெஸ்டின் முதல் நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட் இழப்பிற்கு 297 ரன்கள் எடுத்துள்ளது.

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கேப்டவுனில் நேற்று தொடங்கியது. ஆடுகளத்தில் புற்கள் அதிகமாக இருந்ததால் இலங்கை அணி நாணய சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பை செய்தது.

அதன்படி தென்னாபிரிக்கா அணியின் ஸ்டீபன் குக், டீன் எல்கர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஆட்டத்தின் முதல் ஓவரிலேயே தென்னாபிரிக்கா முதல் விக்கெட்டை இழந்தது. குக் ரன் ஏதும் எடுக்காமல் லக்மல் பந்தில் ஆட்டம் இழந் தார்.

அடுத்து வந்த அம்லா 29 ரன்னிலும், டுமினி ரன் ஏதும் எடுக்காமலும் ஆட்டம் இழந்தனர். ஆனால் டீன் எல்கர் சிறப்பாக விளையாடி அரை சதம் கடந்தார். அவருக்கு துணையாக டு பிளிசிஸ் (38), பவுமா (10) ஓரளவிற்கு தாக் குப் பிடிக்க, டீன் எல்கர் சதத்தை நோக்கிச் சென்றார்.

6-வது விக்கெட்டுக்கு களம் இறங்கிய விக்கெட் கீப்பர் டி காக் நிலைத்து நின்று விளையாடினார். டீன் எல்கர் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய எல்கர் 129 ரன்னில் ஆட்டம் இழந்தார். மறுமுனையில் விளையாடிய டி காக் அரைசதம் அடித்தார். இவர் சதத்தால் தென்னாபிரிக்கா அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப் பிற்கு 297 ரன்கள் எடுத்துள் ளது.



டி காக் 68 ரன்னுடனும், அப்போட் 16 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இலங்கை அணி தரப்பில் குமாரா 3 விக்கெட்டும், லக்மல் 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## வி.விழா தொடர்பான கலந்துரையாடல்

2017ம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேசசெயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்தவிளையாட்டு விழா இவ் வருடமும் நடைபெற வுள்ளது.

இப்போட்டிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 04.01.2017 புதன்கிழமை அன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு கழகங்களின் தலைவர் மற்றும் செயலாளர் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இக்கலந்துரையாடலுக்கு வருகை தராத கழகங்கள் 2017ம் ஆண்டுக்கான பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் பங்குகொள்ள முடியாது என்பதுடன் இக்கலந்துரையாடலில் போட்டிகளுக்கான போட்டிநிரல் தயாரிக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (க)

# எல்லை மீறும் நகர்வுகளைத் தடுக்க கூட்டுரோந்து பாதுகாப்பு நடவடிக்கை

## இந்திய - இலங்கை பிரதிநிதிகள் சந்திப்பில் இணக்கம்



எல்லை மீறும் ந்கர்வுகளை தடுக்கவும் சட்டவிரோத மீன்பிடியை தடுக்கவும் கூட்டுரோந்து பாதுகாப்பு நடவடிக்கையை கையாளவும் கண்காணிக்கவும் இலங்கை இந்திய அரச பிரதிநிதிகளின் தலைமையில் இருநாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பிலான பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப் பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி மீண்டும் கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தைகளின் போதும் தொடர்ச்சியாக இரு நாடுகளுக்கு இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளின் போதும் பிரச்சினைகளுக்கு முழுமையான நிரந்தர தீர்வுகளை காணவும் இணக்கம் கண்டுள்ளனர்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பிலான இரண்டு நாடுகளுக்கு இடையிலான இரண்டாம் கட்ட அரச தரப்பு பேச்சுவார்த்தை நேற்று கொழும்பில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் இலங்கை பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.எ. சுமந்திரன், வடமாகாண அமைச்சர் டெனிஸ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் செந்தில் தொண்டமான், அமைச்சின் பிரதிநிதிகள், பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெடடியாராச்சி மற்றும் கடற்படை தளபதி உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்திய அரச பிரதிநிதிகள் சார்பில் இந்திய மீன்வளத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் உள்ளிட்ட 11 பிரதிநிதிகள் இந்த பேச்சுவார்த்தை கலந்து கொண்டனர். இந்த சந்திப்பின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிக்கையில்.

வடக்கின் மீனவர் பிரச்சினை தொடர்பில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு இந்த இருநாட்டு பேச்சுவாரத்தை முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி முதலாம் கட்ட பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டது. எனினும் முதலாம கட்ட பேச்சுவாரத்தைகள் அதிகாரிகள் மட்ட பேச்சுவாரத்தையாக அமைந்தது. இம்முறை இது இரு தரப்பு அரசாங்கம்சார்ந்த முக்கிய பேச்சுவாரத்தையாக முன்னெடுத்தோம். இந்திய மத்திய அரசாங்கத்துடன் சுமுகமாக பேச்சுவாரத்தை நடத்தி மீனவர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளவே நாம் முயற்சிகின்றோம். எனினும் இலங்கை அரசாங்கத்தின்நடவடிக்கை தொடர்பில் இந்திய அரசாங்கம் மற்றும் மீன்பிடி சங்கங்கள் தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். குறிப்பாக இலங்கை கடற்படை மூலம் கைது செய்யப் படும் மீனவர்களை விடுவித்த போதிலும் தடுத்து வைக்கப் பட்டுள்ள படகுகளை விடுவிக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் அத்துமீறி இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் இந்திய படகுகளை நாம் ஆரம்பம் முதற்கொண்டு தடுத்து வைத்து வருகின்றோம். இப்போது அதிகளவான படகுகள் எமது வசம் உள்ளது. எதிர்காலத்திலும் சட்டவிரோத மீன்பிடி நகர்வுகளுக்கு நாம் இணங்கப்போவதில்லை. எனினும் இந்திய படகுகளை விடுவிக்க வேண்டுமென இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. ஆரம்பத்தில் நாம் 51 இந்திய படகுகளை விடுவித்தோம். ஏனையவை விடுவிப்பது தொடர்பில் அரசாங்கம் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. பரிசீலனை செய்து இந்த நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்போம்.

மேலும் இழுவை படகு மீன்பிடி முறைமையை தடுக்க வேண்டும் என நாம் ஆரம்பம் முதட்கொண்டு இந்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி வந்துள்ளோம். எனினும் தற்போது இந்திய அரசாங்கம் எமது கோரிக்கையை ஏற்று கொண்டுள்ளது. அதேபோல் இந்த முறையில் படகுகளை பயன்படுத்தாது மாற்று வழிகளை கையாளவும் இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும் மாற்று வழிமுறைகள் இல்லாத காரணத்தினால் சிறிது காலம் தேவைப்படும் என தெரிவிக்கின்றனர். குறிப்பாக இலங்கை கடல் எல்லைக்குள் வரவிருந்த 92 படகுகளை இந்திய அரசாங்கம் வேறு நடவடிக்கைகளுக்கு பயன் படுத்தியுள்ளது.

இந்தியாவுக்கும் இந்த பிரச்சினை பிரதான பிரச்சினையாக உள்ளது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும இந்தியா இவ்வாறு மீன்பிடி முறைமைகளில் தான் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துகின்றனர். இலங்கை எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கைகளை தடுக்க அரசாங்கம் முயற்சிக்கும் போது அங்கு மீனவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பில் நாமும் நன்கு அறிவோம். எனினும் இதை இந்திய அரசங்கம் கையாள வேண்டும். ஒரே தடவையில் உடனடியாக பிரச்சினைகளை தீர்க்க முடியாது. எனினும் ஆரம்பத்தில் இருந்த பிரச்சினைகள் இப்போது குறைவடைந்துள்ளது. எவ்வாறு இருப்பினும் இன்னும் சில ஆண்டுகளில் இந்த மீனவர் பிரச்சினைகளுக்கு இஸ்திரமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதேபோல் மீன்படி முறைமையில் நவீன தொழிநுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இரு நாட்டு மீன்பிடி படகுகளிலும் இந்த நவீன தொழிநுட்ப கருவிகளை பொருத்தி மீன்பிடியில் ஈடுபடும் முறைமையும் அதேபோல் இரு நாட்டு கடற்படை அதிகாரிகளுக்கு இந்த தொழிநுட்பத்தின் மூலம் படகுகளின் நகர்வுகளை கண்காணிக்கும் நகர்வுகளையும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இருநாட்டு கூட்டு ரோந்து நகர்வுகளின் மூலம் மீனவர் எல்லை மீறல்களை தடுக்க முடியும். மேலும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி மீண்டும மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் நடைபெறும். இந்த பேச்சுவார்த்தைகளின் போதும் தொடர்ச்சியாக இரு நாடுகளுக்கு இடையில் நடக்கும் பேச்சுவாரதைகளின் போதும் பிரச்சினைகளுக்கு முழுமையான நிரந்தர தீர்வுகளை காண முயற்சிகின்றோம். ஒரு பேச்சுவார்த்தையால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என அவர் தெரிவித்தார்.

## சமூக வலைத்தளத்தில் காதல்

# 16 வயதுச் சிறுமி, இளைஞன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

வவுனியாவில் நேற்று மாலை 5மணியளவில் சிறுமி ஒருவரை கடத்தும் முயற்சி வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து முறியடிக்கப்பட்டுள்ளது.

சமூகவலைத்தளம் மூலமாக தொடர்பினை ஏற்படுத்திய மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சுந்தரபுரம் பகுதியிலுள்ள 16வயதுடைய சிறுமியுடன் தொடர்பினை ஏற்படுத்தி பலகாலமாக பழகிவந்துள்ளார்.

இந் நிலையில் நேற்று மாலை குறித்த சிறுமியை வவுனியா பேருந்து நிலையத் திற்கு வருமாறு குறித்த இளைஞன் அழைத்துள்ளார். குறித்த சிறுமியும் இளைஞனின் வார்த்தைக்கு இணங்கி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில அங்கு சென்றுள்ளார்.

சிறுமி வீட்டிலிருந்து வெளியேறுவதாக தந்தைக்கு அயல வர்களினால் தகவல் வழங் கப்பட்டுள்ளது. தந்தை உடனடியாக வவுனியா வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் உறவினருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

பேருந்து நிலையத்தில் காத்திருந்த உறவினர் சிறுமி பேருந்தில் வந்து இறங்கியதும் குறித்த இளைஞன் பேரு ந்து தரிப்பிடத்தில் சிறுமியை அழைத்துச் செல்ல தயாராக இருந்ததை யடுத்து காத்திருந்த உறவினர்கள் குறித்த இருவரையும் கடுமையாக தாக்கியதுடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிறுவர், பெண்கள் பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். இ-250)



முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் 9 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் அனு ஷ்டிக்கப்பட்டது. மகேஸ்வரனின் திருவுருவப்படத்திற்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவித்து மலர்அஞ்சலியும் இடம்பெற்றது. ஐக்கிய தேசிய கட்சியின் வட்டுக்கோட்டை அமைப்பாளர் விஜி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மதகுருமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். (படங்கள்:-உ.சாளின்,பொ.சோபிகா)



யாழ்.சில்லாலை சென்.ஜேம்ஸ் முன்பள்ளியின் ஒளி விழா அண்மையில் இடம் பெற்ற போது...



இ.போ.ச.யாழ். சாலையில் அமைந்துள்ள கிறிஸ்தவ ஊழியர் சங்க வருடாந்த ஒளிவிழா- 2016 நிகழ்வு அண்மையில் யாழ். சாலை வளாகத்தில் நடைபெற்றது. கிறிஸ்தவ ஊழியர் சங்கத் தலைவர் அ.அருள்பிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் ஒளிவிழாவில் பிரதம விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா கலந்து கொண்டு சிறுவர்களுக்கு பரிசு வழங்கினார். அத்தோடு யாழ். சாலை (இ.போ.ச.) பணியாளர்களில் சேவை மூத்த உறுப்பினர்களுக்கும் பரிசில் வழங்கி கௌரவித்தார்.






பேண்தகு யுகம் - மூன்றாண்டு உதயம்

ஜனாதிபதியிடம் தெரிவிக்க




மக்கள் பிரச்சினைகளை வினைத்திறனான முறையில் தீர்த்து வைப்பதற்காக இயங்கிவரும் "ஜனாதிபதியிடம் தெரிவிக்க" செயற்திட்டத்தின் அடுத்த கட்டமாக வட மாகாண ஆளுநர்

கௌரவ ரெஜினோல்ட் குரே அவர்களது அழைப்பின்பேரில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்

**மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களது தலைமையில்**

**ஜனாதிபதியிடம் தெரிவிக்க**

ජනපතිට කියන්න | Tell the President

முதலாவது பிராந்திய அலுவலகம்

**2017 ஜனவரி 04 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு**

**வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில்** திறந்து வைக்கப்படுகிறது.

இதன்மூலம் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களை, வட மாகாண மக்கள் நெருங்கி தமது பிரச்சினைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை நேரடியாக சமர்ப்பிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

**இதற்கு மேலதிகமாக:**

- 1919 இலக்கத்தை அழைப்பதன் மூலம்
- tell.president.gov.lk இணையத்தளம் ஊடாக
- தபால் பெட்டி 123, கொழும்பு எனும் தபால் முகவரி ஊடாக
- tell@presidentsoffice.lk மின்னஞ்சல் முகவரி ஊடாக

மக்கள் தமது பிரச்சினைகள், கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கலாம்






2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றைய தினம் காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. தேசிய கொடியேற்றலினை தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களினால் இவ்வாண்டுக்கான அரச சேவை சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஜனாதிபதியின் நிலைபேறான நோக்கு பிரகடனமும் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
(படங்கள்: பொ.சோபிகா)

# நான்கு இலட்சம் கிலோ போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

கடந்த 5 வருடத்தினுள் இலங்கையில் கிட்டத்தட்ட 4 இலட்சம் கிலோ கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்செயலுடன் தொடர்புடைய குற்றவாளிகள் 3 இலட்சத்து மூவாயிரம் பேர் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்தில் மாத்திரம் போதைப் பொருள் குற்றவாளிகள் கிட்டத்தட்ட 80 பேர் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளனர். 6 ஆயிரத்து 800 கிலோ கிராம் போதைப்பொருளும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பி டப்படுகின்றது.

அதற்கமைய கஞ்சா பயன்படுத்தல், அருகில் வைத்திருத்தல் மற்றும் கஞ்சா வுடன் பயணித்தமை ஆகிய குற்றச்சாட் டுகளிலேயே அதிகமானோர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

அந்த நபர்களின் எண்ணிக்கை 52 ஆயிரத்து 319 ஆகும். அவர்களிடம் இருந்து 6 ஆயிரத்து 569 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹெரோயினுடன் 2015 ஆம் ஆண்டு 26 ஆயிரத்து 468 பேர் பாதுகாப்பு பிரிவி னரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற் கமைய 67 கிரோகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு போதைப்பொருள் குற்றம் தொடர்பில் பாதுகாப்பு பிரிவினரால் 7 ஆயிரம் பேர் கைது செய் யப்பட்டுள்ளனர். அத்துடன் 20 ஆயிரம் கிலோ கிராம் போதைப்பொருள் கைப்ப ற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 5 வருட காலப்பகுதியில் இலங கையில் 3 இலட்சத்து 86 ஆயிரத்து 500 கிலோ கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவினால் தெரி விக்கப்பட்டு முரண்படுவ தற்கு பிரதான ஏதுவாக அமைந்தது என சுட்டிக் காட்டப்ப ட்டது.

எனினும் இந்தக் காரி யாலயத்தை தொடர்ந்தும் கொண்டு நடத்துவதில் எவ் வித பயனும் கிடையாது என ஜனாதிபதிக்கு பரிந் துரை செய்யப்பட்டுள் ளது.

இதேவேளை இந்தப் பதவியை இரத்துச் செய் யுமாறு யோசனை முன் வைக்கப்பட்டுள்ள போதி லும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என பாதுகாப்புச் செயலா ளர் கருணாசேன ஹெட் டியாராச்சி தெரிவித்துள ளார். (இ-7)


ஓராண்டு நினைவஞ்சலி ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1934 06 04 — விண்ணில் 2016 01 14

அமரர் செல்லப்பா பொன்னுச்சாமி (இளையயா)

அப்பா அவனியில் நீ
அகன்று ஓராண்டு
ஆனதுவே - ஆறுதல்
அளிக்க யாருமின்றி - நாம்
ஆறுமோ எம்மிதயம்



மண்ணில் 1943 04 26 — விண்ணில் 2015 02 03

அமரர் பொன்னுச்சாமி நாகேஸ்வரி

ஈராண்டு வந்ததம்மா - உங்கள்
நினைவு ஆறவில்லை
நீங்கள் இல்லாத மனை பொலி
விழந்து நிற்குதம்மா
உங்களை நினைத்து தினம் தினம்
ஏங்கி நிற்கிறோம் அம்மா



நீங்கள் இருவரும் இன்றித் தவிக்கும் குடும்பத்தினர்.
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(7353)


## இராசி பலன்

03.01.2017
(மார்கழி 19, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 2.07 மணிவரை
சதயம் பிற்பகல் 3.59 மணிவரை
சுபநேரம் 11.00-12.30 மணிவரை
இராகுகாலம் 3.30-5.00மணிவரை
சஷ்டி விரதம்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் சுக், சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | |
| | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

வளவன்

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங் கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உரு வாகும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், போசன சுகம் உண்டு.

**இடபம்:** இல்லத்தில் இனிய சம்பவங் கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும், அரசு வழிச் சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர் ப்பது நல்லது, வழிபாடு மகத்துவம் தரும், உங்களின் கடின உழைப்பை மற்ற வர்கள் வியப்பாகப் பார்ப் பர்.

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

**சிம்மம்:** சந்தித்த நபர்களால் சந்தோ சம் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக் கும், தொலைபேசியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்களின் செல் வாக்கு மேலோங்கும், மருத்து வச் செலவுகள் குறையும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும்.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர் பார்ப்புகள் நிறைவேறும் சந்த ர்ப்பமுண்டு, வியாபார விருத் தியுண்டு, பிள்ளைகளின் நல னில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெ டுத்து வைப்பீர்கள், பாராட் டும் புகழும் கூடும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர் ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மகரம்:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பக்குவ மாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாடு மகத்துவம் தரும்.

**கும்பம்:** ஆழ்ந்த சிந்தனையுண்டு, ஆதா யம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, ஆன்மீக சிந்தனை மேலோங் கும் நாள்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிட லாம், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், அந்நிய தேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

# பொதுமக்களுக்கு சலிப்பு ஏற்படக்கூடாது

## நீதித்துறை உத்தியோகத்தர்களுக்கு நீதிபதி இளஞ்செழியன் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களை எந்தவொரு சலிப்புக்கும் உட்படுத்தாமல் நீதித்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் செயற்பட






வேண்டும் என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சேவை சத்தியப் பிரமாண நிகழ்வு தேசியக் கொடி ஏற்றலுடன் நேற்றைய தினம் யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதில் உரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த வருடம் சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அனைவருக்கும் அமைய வேண்டும். நாம் சமூகத்துக்கு என்ன செய்தோம், நாட்டுக்கு என்ன செய்தோம் என்பதை மனதில் அமர்த்தி புனிதமான அரச சேவை மற்றும் கடமையை நிறைவேற்ற வேண்டும். நீதித்துறையானது எதுவித தலையீடும் இல்லாது சுதந்திரமாக இயங்குவதற்கு நீதிமன்ற உத்தியோகத்தர்களுடைய அரச கடமை மக்களுக்கு தேவையானது.

நீதிமன்ற உத்தியோகத்தர்களை நம்பி மக்கள் நீதிமன்றுக்கு வருகிறார்கள். அவர்களை எந்தவிதமான சலிப்புக்கும் உட்படுத்தாது அவர்களுக்குசிறந்தசேவையை வழங்குவதற்கு அரச சேவையின் அதி உச்ச அரச சேவையாளர்களான நீதித்துறை உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டும் என தெரிவித்தார். (இ-9)




# பொலிஸ் காவலரணுக்கு மின்சாரம் வழங்கல்

துன்னாலை வடக்கு புளியங்கியான் சந்தியில் உள்ள பொலிஸ் காவலரணுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ்மா அதிபரின் பணிப்பிற்கமைய பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அக்காவலரணில் மின்சார வசதி எதுவும் இருக்கவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் அக்காவலரணில் இருந்த பொலிஸார் மீது மிளகாய் தூள் வீசப்பட்டிருந்தது.

இதனையடுத்தே தற்போது அக் காவலரணுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் புளியங்கியான் சந்தியில் இருந்து வல்லிபுரம் சந்திக்கு செல்லும் வீதியில் பிரகாசமான வீதி விளக்கு ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் அநேகமான குற்றச் செயல்களைத் தடுக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# கஞ்சாவுடன் கைதான இளைஞனுக்கு மறியல்

வடமராட்சி வல்லைப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞனை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி வல்லைப் பகுதியில் 1.470 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (இ-60)

# ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பயிற்சி நிலையம் கோண்டாவிலில் திறப்பு



(படங்கள்:-பொ.சோபிகா)

ஆறுதல் நிறுவனத்தினால் "ப்ளஸ்ஸம்" (BLOSSOMS) ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பயிற்சி நிலையம் நேற்றைய தினம்கோண்டாவில் கிழக்கு ஸ்ரேசன் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.



இப் பயிற்சி நிலையத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால கற்றல் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதுடன் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படும. மேலும் 2 வயது தொடக்கம் 5 வயது வரையான சிறுவர்களுக்கு ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்தி பயிற்சியும் 6 வயது தொடக்கம் 8 வயது வரையான சிறுவர்களுக்கு கணிதம், தமிழ், ஆங்கிலம், சிங்களம் போன்ற வகுப்புக்கள் நடைபெறும்.

இங்கு காலை 8.30 மணி தொடக்கம் 12.30 வரையான கற்றல் செயற்பாடுகள் நடைபெறவுள்ளதுடன், பராமரிப்பு கோரிக்கை விடப்படும் பிள்ளைகளுக்கான பராமரிப்பு மாலை 5 மணி வரை நடைபெறும் என ஆறுதல் நிறுவனத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வடலிகள் வானுயரும்" என்ற தொனிப்பொருளில் ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் மதகுருமார் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கியதுடன், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் செல்வி த.ஜெயக்குமாரி, சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)



அத்தியடி இந்து இளைஞர் சங்க ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வின் போது...

# நல்லின ஆடுகள் வழங்கி வைப்பு

வடமாகாண கால்நடை அமைச்சால் அனலைதீவில் 25 தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நல்லின ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அனலைதீவு ஐயனார் கோவிலடியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சி யில் வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கி வைத்துள்ளார்.

வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சு பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் போசணை மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் நல்லின ஆடுகளை வழங்கும் தகர் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத் திட்டத்தின் ஒரு கட்டமாகவே அனலைதீ வில் ஆடுகள் வழங்கி வைக் கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், கால்நடை வைத்திய அதிகாரிகள் ஜே.யூட்சுவேன், ச.நர்மஜன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# பகல் பராமரிப்பு நிலைய அங்குரார்ப்பண நிகழ்வு

கரணவாய் கிழக்கு முதியோர் சங்க பகல் பராமரிப்பு நிலைய அங்குரார்ப்பண விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரணவாய் கிழக்கு மீள் எழுச்சி மண்டபத்தில் இடம்பெறும். மாதர் கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் திருமதி. ச. மைத்திரேயி தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம இணைப்பாள ருமாகிய அங்கஜன் இராம நாதன் கலந்து கொள்வார். (இ-3-60)



துன்னாலை சதசகாய மாதா ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வு கடந்த வியாழக்கிழமை ஆலய வளாகத்தில் இடம்பெற்ற போது..

(படங்கள்:- பொ.சோபிகா)

# வாராந்த சந்தை இயங்கும் இடத்தில் வேண்டும் வியாபாரம் செய்ய வேறொரு இடத்தில் பணிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட தண்ணீரூற்று மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அண்மையில் இயங்கி வரும் வாராந்த சந்தை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்கு தைப்பொங்கலுடன் மாற்றப்பட வேண்டுமெனவும் வீதியோரத்தில் நடத்த தடைவிதிப்பதாகவும் கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. பிறிதொரு நிகழ்வில் கலந்து கொள்ள வருகைதந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானை வழிமறித்து இப் போராட்டம் நடத்தப்பட்டதோடு தமக்கு நல்லதொரு தீர்வு பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் அந்த இடத்தில் கருத்துதெரிவித்த மக்கள், இது ஆரம்பகாலத்திலும் இவ்விடத்தில் இச்சந்தை இயங்கியதாகவும் இச் சந்தை எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பெரிதும் உதவுவதாகவும் இந்த பகுதியை சுற்றியுள்ள 5 ஆயிரம் பேர் வரையில் பயன்பெறுவதாகவும் இதனை நிறுத்தி பொருத்தமில்லாத இடத்தில் தம்மை வியாபாரம் செய்ய பணிப்பதாகவும் கூறினர்.

இதற்கு பதிலளித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், அதிகாரிகள்,அரசியல் தலைமைகள் அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுத்த முடிவை நான் மாற்ற முடியாது. அனைவருடனும் கலந்துரையாடி இதற்கு ஒரு முடிவை தர முடியும் என தெரிவித்தார்.

இதுதொடர்பாக கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளரால் கூறப்பட்டவை வருமாறு.

மேற்படி சந்தை வீதியோரத்தில் நடத்தப்படுவதால் சுகாதார சீர்கேடுகள் இடம் பெறுவதாகவும் மீன்,கோழி கூட இங்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தம்புள்ளையிலிருந்தும் வேறு இடத்திலிருந்தும் பொருட்கள் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகிறது அதனைவிட வீதி விபத்துக்கள் இடம் பெறுவதாகவும் தம்மிடம் சந்தை பகுதியில் கடைகளை வாடகைக்கு எடுத்தவர்கள் பாதிக்கப்படுவதாக முறையிடுவதாகவும் தெரிவித்தார்

இதுதொடர்பாக பல்வேறு விவாதங்கள் இடம்பெற்றன. இதனை தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரும் இது உருவாக்கப்பட்டதன் நோக்கு தற்போது மாறியுள்ளதாக தெரிவித்தார்.

இறுதியில் அனைத்து பிரச்சினைகளையும் கருத்தில்கொண்டே தைப்பொங்கல் வரை குறித்த இடத்தில் அனுமதிப்பதாகவும் அதன்பின்னர் அதற்கென கட்டம் அமைக்கப்பட்ட இடத்திற்கு செல்ல வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.எது எவ்வாறிருப்பினும் குறித்த பகுதியில் மக்கள் மிகவும் மலிவான விலையில் பொருட்களை பெற்றுக் கொள்ள முடிகிறது என தெரிவிக்கின்றனர். (2-281)

## போதைப்பொருள் வைத்திருந்த ஐவர் வவுனியா நகரப் பகுதியில் கைது

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த ஐவர் பொலிஸாரால் கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரப்பகுதியில் வவுனியா போதைப்பொருள் தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் கலாவினோதன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் மூலம் சட்டவிரோத போதைப்பொருள் உடைமையில் வைத்திருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பேருந்து நிலையப் பகுதியில் 0.120 மில்லி கிராம் ஹெரோயின் உடைமையில் வைத்திருந்த அநுராதபுரத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து நடத்துநர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அப்பகுதியில் 2 கிராம் 790 மில்லி கிராம் கேரளா கஞ்சா உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இவற்றுடன் வவுனியா நகரப் பகுதியில் 19 கிராம் 510 மில்லி கிராம் மற்றும் 17 கிராம் 60 மில்லிகிராம் மாபா எனப்படும் போதைப் பொருள் வைத்திருந்த இருவரும், பொது இடத்தில் புகைப்பிடித்த ஒருவரும் என 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (2-250)

## கோஷ்டி மோதல்; மோட்டார் சைக்கிள் தீக்கிரை

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்டமோதல் காரணமாக மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டன.

புதுவருடத்தில் அன்று இரவு 10.30 மணியளவில் இச்சம்பவம் நெடுங்கேணி கற்குளம் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்டமோதல் காரணமாக இறுதியில் மோட்டார் சைக்கிள் தீ மூட்டப்பட்டு முற்று முழுதாக எரிந்து சாம்பலானது.

இது தொடர்பாக நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரியும் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## இயல்பு நிலை ஏற்படுத்தப்படாவிடின் இணைந்து போராட்டத்தில் ஈடுபடுவோம்

### முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எச்சரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்வதற்கான இயல்பு நிலையை ஏற்படுத்தித்தர வேண்டும்" என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நல்லதண்ணீர்த் தொடுவாய் முதல் பேய்ப்பாறைப்பிட்டி வரைக்குமான சுமார் 73 கிலோமீற்றர் நீளமான கரையோரப்பகுதிகளைக் கொண்ட கடற்பகுதிகளிலும் நாயாறு வட்டுவாகல் ஆறு உள்ளிட்ட சிறுகடல் பகுதிகளிலும் சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில். "வட்டுவாகல் ஆறு கொக்கிளாய் ஆறு ஆகிய சிறுகடல் பகுதிகளில் அனுமதியற்ற சட்டவிரோத தொழில்கள் மேற்கொள்ளப்படுவதனால் தமது தொழில் நடவடிக்கைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என தொடர்ந்தும் மீனவர்களிடமிருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதனை விட. முல்லைத்தீவு கடல் பகுதிகளில் முறையற்ற வகையில் கரை வலைப்பாடுகளுக்காக அனுமதிகள் வழங்கப்பட்டு உழவு இயந்திரங்களை பயன்படுத்தி கரை வலைப்பாடுகளை இழுத்தல், டைனமைற் பாவித்து மீன்பிடித்தல், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், நிபந்தனை மீறிய அட்டைத்தொழில்கள் என பல்வேறு சட்டத்துக்கு முரணான தொழில் நடவடிக்கைகள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்க ளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டபோதும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது

இது தொடர்பில் சமாசத்தின் தலைவர் ஏ.மரியராசா கருத்து தெரிவிக்கையில்,

"மலர்ந்துள்ள புதிய ஆண்டிலாவது, முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தித்தரப்பட வேண்டும். இந்தநிலை தொடர்ந்தும் ஏற்படுமாக இருந்தால் மீனவர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்" என அவர் மேலும் கூறியுள்ளார். (2-281)

## புதுவருட பிறப்பையொட்டி முதியவர்களுக்கு உடுபுடைவைகள்





மன்னார் மாவட்டத்தின் மாந்தை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப் பின் ஏற்பாட்டில் புது வருட பிறப்பை முன்னிட்டு உடு புடைவைகள் அடங்கிய பொதி மாந்தை பிர தேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு இரு தினங்கள் மாந்தை மேற்கு மாந்தை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது, ஆள்காட்டி வெளி, ஆண்டான்குளம் ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவில் உள்ள வயோதிபர்களுக்கே இவ்வாறு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் சிறிஸ்கந்தகுமார் மற்றும் கிராம அலுவலர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், விவசாய அமைப்பு ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு முதியோர்களைக் கௌரவித்தனர். (2-15)

வன்னி வலம்



முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட 30 வீடுகளும் இவரது புதல்வர் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசவால் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் இடம் பெற்றபோது... (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் வாழ்விடங்களில் இருந்து 3 இலட்சத்து 401 வெடிபொருட்கள் மீட்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இறுதி யுத்தத்தின் பின்னரான மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கையின் போது, மக்கள் வாழ்விடங்களில் இருந்து இதுவரை 3 இலட்சத்து 401 வெடி பொருட்களை மீட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலக கண்ணிவெடி செயற்பாட்டு அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றத்தை மேற்கொள்ளும் பொருட்டு அடையாளம் காணப்பட்ட பகுதிகளில், வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியமர அனுமதி வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிக ஆபத்தான பகுதியாகவும் வெடி பொருட்கள் விதைக்கப்பட்ட பூமியாகவும் முகமாலைப்பகுதி காணப்படுகின்றது.

தற்போது பதினொரு சதுர கிலோமீற்றர் வரையான பகுதிகளில் மட்டும் வெடி பொருட்கள் அகற்றப்பட வேண்டியுள்ளது.

கிளாலி தொடக்கம் நாகர்கோவில் வரைக்குமான பகுதிகள் மிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக இனம் காணப்பட்டே வெடி பொருட்கள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வெடி பொருட்கள் அடையாளம்



காணப்பட்ட பகுதிகளில், மனிதநேய கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்கள் மேற்கொண்ட மீட்புப்பணிகளின்போது இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மக்கள் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட 2009 ஆண்டில் இருந்து கடந்த வருடம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 107,270, மிதிவெடிகளும் -505, அதி சக்தி வாய்ந்த கவச எதிர்ப்பு வெடிகளும், மிக ஆபத்தை விளைவிக்கக்கூடிய வெடிக்கும் நிலையில் காணப்பட்ட எறிகணைகள், கைக்குண்டுகள், துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட- 208,626, வெடி பொருட்கள் என மொத்தம் - 300,401, வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக அத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஆட்டோச் சாரதி மீது தாக்குதல் இராணுவ வீரர்கள் கைதாகினர்

(குருமன்காடு)

வவுனியாவில் ஆட்டோச் சாரதி மீது தாக்குதல் நடத்திய இராணுவ வீரர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவமானது, வவுனியா பேருந்து தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மூன்றுமுறிப்பு பகுதியிலிருந்து இராணுவ வீரர்கள் ஆட்டோவில் பேருந்து நிலையத்திற்கு செல்வதற்காக ஏறியுள்ளனர்.

ஆட்டோவில் ஏறும்போது 150 ரூபா ஆட்டோக் கட்டணம் என ஆட்டோச் சாரதி தெரிவித்துள்ளார்.

எனினும் பேருந்து நிலையத்தில் வந்து இறங்கியதும் 120 ரூபாயை 'இராணுவ வீரர்கள் இருவ ரும் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து ஆட்டோச் சாரதி 150 ரூபா பணத்தை தருமாறு கேட்டதன் காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து ஆட்டோச் சாரதி மீது இராணுவ வீரர்கள் இருவரும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன் தாக்கப்பட்ட சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து தாக்குதல் மேற்கொண்ட இராணுவ வீரர்களை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-50)

# வேலைவாய்ப்புக் கோரி முன்னாள் போராளிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களம் முன்பாக திரள்வு





சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் தங்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறு நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு முன்னால் ஒன்றுதிரண்டு தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

நேற்று 10.30 மணியளவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆண், பெண் முன்னாள் போராளிகள் தாங்கள் புனர்வாழ்வு பெற்று வெளியில் வந்த காலம் முதல் நிரந்தர தொழில் இன்றி பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்ந்து வருவதாகவும், புனர்வாழ்வு பெற்ற காலத்தில் தங்களுக்கு பண்ணை பயிற்சியே வழங்கப்பட்டது என்றும் எனவே சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி நின்றனர்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு புதிதாக ஆட்கள் எடுப்பதாக தங்களுக்கு தகவல் கிடைத்தது என்றும் அதனடிப்படையில் இன்று (நேற்று) தேசிய அடையாள அட்டை மற்றும் புனர்வாழ்வு பெற்று விடுதலையான கடிதம் ஆகியவற்றுடன் வருமாறு தகவல் வெளிவந்தது. அதற்காகவே இங்கு வந்திருகின்றோம்.எனவே எங்களுக்கு வேலைவாய்ப்பை தாருங்கள் என சிவில் பாதுகாப்புத் திணைக்கள கிளிநொச்சி கட்டளை அதிகாரி மேஜர் சாகர வீரசிங்கவிடம் கோரி நின்றனர்.

ஆரம்பத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வேலைவாய்ப்புக்கு ஆட்கள் உள்வாங்கப்பட்ட போது பெரும்பாலான முன்னாள் போராளிகள் தடுப்பில் இருந்து வெளிவரவில்லை. வெளிவந்தவர்களில பலர் அப்போது இணைந்துகொள்வதில் விருப்பம் தெரிவிக்கவில்லை. காரணம் புதிதாக படையினருக்கு ஆட்கள் சேர்க்கின்றார்கள் என்று பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால் இப்போது நாங்கள் பார்க்கின்றோம் மாதாந்தம் முப்பதாயிரம் ரூபாவுக்கு மேலதிகமான சம்பளத்துடன் பண்ணைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றமையை. இதன் மூலம் அந்தக் குடும்பங்கள் நிம்மதியாக வாழ்கின்றன. எனவே அவ்வாறானதொரு நிம்மதியான வாழ்க்கையை ஏனைய முன்னாள் போராளிகளும் பெற்றுக்கொள்ள எங்களுக்கும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் வேலை தாருங்கள் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சிவில் பாதுகாப்புத் திணைக்கள கிளிநொச்சி கட்டளை அதிகாரி மேஜர் சாகர வீரசிங்க கருத்து தெரிவித்த போது,

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு புதிதாக ஆட்கள் எடுப்பதாக வெளியான தவறான தகவலை அடிப்படையாக கொண்டு நூற்றுக்கணக்கான முன்னாள் போராளிகள் ஒன்று கூடியுள்ளனர். சிவில் பாதுகாப்பு திணைக்களத்தை பொறுத்தவரை தற்போதைக்கு புதிதாக ஆட்கள் எவரையும் உள்வாங்கும் நிலையில் இல்லை. இந்த விடயத்தில் எங்களால் எதுவும் செய்ய முடியாது. கொழும்பு மட்டத்தில் உயரதிகாரிகளால் தீர்மானிக்கப்படுகின்ற விடயம் எனவும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து அங்கிருந்து வெளியேறிய முன்னாள் போராளிகள் இரணைமடுச் சந்தியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் வேலை வாய்ப்பு கோரி கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்றிலும் ஈடுபட்டனர்.

இதன் போது சில பெண் முன்னாள் போராளிகள் குழந்தைகளுடன் வேலைவாய்ப்பு கோரி காத்திருந்த பரிதாபமான சம்பவங்களும் இடம்பெற்றன.

இதேவேளை 170 பேர் கையொப்பம் இட்டு வேலை வாய்ப்பு கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை கிளிநொச்சி அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளித்தனர்.

அத்தோடு ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான மகஜரை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் கையளிக்கவும் தீர்மானித்துள்ளனர். (2-312)




### பாதுகாப்பு சமிக்ஞையை மீறி
# கடக்க முற்பட்ட கப் வாகனம் ஒன்று புகையிரதத்துடன் மோதுண்டு விபத்து
### இருவர் வைத்தியசாலையில் அனுமதி



மாங்குளம் பொலிஸ் பிரிவில், முறிகண்டி அக்கராயன் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

யாழில் இருந்து பயணித்த புகையிரதத்துடன் முறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கி பயணித்த கப் வாகனம், பாதுகாப்பு சமிக்ஞையை மீறி கடக்க முற்பட்ட போது குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வாகனத்தில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதுடன், வாகனத்தில் பயணித்தவர்கள் தெய்வாதீனமாக காயங்களுடன் தப்பித்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணை களை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(2-15)

### 'வறுமை ஒழிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்'
# அரச உத்தியோகத்தர்கள் நேற்று மன்னாரில் சத்தியப்பிரமாணம்

மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் புதுவருட முதல் நாளான நேற்று அரசாங்க திணைக்களங்களின் முதல் நாள் வேலைகள் ஆரம்பமாகியதை முன்னிட்டு சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட செயலகம், பிரதேசச் செயலகங்கள் உட்பட அரச திணைக்களங்களில் உத்தியோகத்தர்கள் "வறுமை ஒழிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு" நேற்றைய தினம் சத்தியப்பிரமாணம் செய்து உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

அரசாங்கம் 2017 ஆம் ஆண்டினை வறுமை ஒழிப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது.

அதற்காக அரச உத்தியோகத்தர்கள் ஆகிய நாமும் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக வறுமையை ஒழித்து இந்த நாட்டின் வளர்ச்சிக்காக உண்மையாகவும் நேர்மையாகவும் பணியாற்றுவோம்" என சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

முசலி பிரதேச செயலகத்தில் முசலி பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் சக உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு தமது கடமைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# புத்தாண்டுப் பலன்கள்



எதற்கும் கலங்காத மனம் கொண்ட கடக இராசி அன்பர்களே!

புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர் நீங்கள். எதை எந்த நேரத்தில் செய்தால் எப்படி வெற்றி பெறலாம் என்ற கலையைக் கற்று வைத்திருப்பீர்கள். உதவும் குணம் கொண்டவர் என்பதால், பலரும் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். துணிவைத் துணைக்கு அழைத்துக் கொண்டவர்களின் பட்டியலில் முதலிடம் வகிப்பீர்கள்.

உங்கள் இராசிநாதன் சந்திரன் என்பதால், சிந்தனை வளம் மிக்கவர்களாக இருப்பீர்கள். நாட்டுப்பற்று மிக்க உங்களுக்கு வீட்டுப் பற்று குறைவாகத்தான் இருக்கும். சுக்ர பலம் பார்த்து குடும்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் தக்க விதத்தில் குடும்பம் அமையும். பிடிவாதக் குணத்தை தளர்த்தினால் முன்னேற்றப் பாதையின் முதற்படிக்குச் செல்லலாம்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு, இந்தப் புத்தாண்டு புதிய திருப்பத்தைக் கொடுக்குமா?

## பாம்புக் கிரக வழிபாட்டால் பலன் கிடைக்கும்!

பதவிகளால் பார் போற்றும் நிலை வருமா? என்று பார்ப்போம்.

உங்கள் சுய ஜாதக கட்டத்தையும் புத்தாண்டின் ஜாதகக் கட்டத்தையும் ஒப்பிட்டுப்பாருங்கள். சுழற்சியாகும் கிரகங்கள் பலமிழக்கும் நேரம் பார்த்து பரிகாரம் செய்தால் நலம் வந்து சேரும். நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

**புத்தாண்டின் தொடக்கம்**

புத்தாண்டு பிறக்கும் பொழுது உங்கள் இராசிநாதன் சந்திரன், குருவால் பார்க்கப்பட்டு குரு, சந்திர யோகத்தை உருவாக்குகிறார். செவ்வாய், சனி பரிவர்த்தனையாய் அமைந்து, காரியங்களை வெற்றியாக்கும் விதத்திலேயே இருக்கின்றன. ஆண்டின் தொடக்கத்திலுள்ள கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, 2இல் ராகுவும் 8இல் கேதுவும் இருக்கிறார்கள். மூன்றாமிடத்தில் குரு சஞ்சரித்து, உங்கள் ராசிக்கு 7,9,11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அந்த இடங்களெல்லாம் புனிதமடைந்து நற்பலன்களை வழங்கப் போகின்றன. சனி பகவான் பஞ்சம ஸ்தானத்தில் புதனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். செவ்வாய், சுக்ரன், கேதுவோடு இணைந்து அஷ்டம ஸ்தானத்தில் இருக்கின்றனர். சூரிய பலம் 6இல் உள்ளது.

இத்தகைய கிரகங்களின் அமைப்பில் இந்த ஆண்டு தொடங்குவதால் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப் பிடிக்கப் போகிறீர்கள். உற்றார், உறவினர்கள் கூட உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர். தொழிலில் இதுவரை ஏற்பட்ட தொல்லைகள் அகலும். உடன் இருப்பவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் வந்து சேரும். அலுவலகப் பணியில் இருந்த அல்லல்கள் அகலும். அதேநேரம் கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைத்து மகிழ்ச்சிப்படுத்தும்.

அரசுவழியில் எதிர்பார்த்த சலுகை தாமதமாக வந்து சேரும். இந்த ஆண்டு எதிரிகளின் பலம் குறைவாகவே இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். தசாபுத்தி பலம் பெற்றிருந்தால் மட்டுமே, நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வது நல்லது.

**இராசியை நாடி வரும் ராகு,கேதுக்கள்**

27.07.2017 அன்று ராகு,கேதுக்கள் பெயர்ச்சியாகப் போகின்றன. அதன் விளைவாக எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரப்போகிறது. ஜென்மத்தில் ராகுவும் 7இல் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், அதிக முயற்சி எடுத்தே ஒரு சில காரியங்களை முடிக்க நேரிடும். அதே நேரத்தில் பணப்புழக்கம் நன்றாக இருக்கும். வருமானப் பற்றாக்குறை அகலும். கடக ராகு என்பதால் ராஜயோகத்தை வழங்கும் என்பது பொது நியதி. அந்த அடிப்படையில் அரசுப் பணிக்காக ஏற்பாடு செய்தவர்களுக்கு அது கைகூடும். பணி நிரந்தரம் ஆகவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது நிரந்தரமாகும். கூட்டாளிகளிடம் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. எந்தத் தொழில் செய்தாலும் உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக் கொள்வது நல்லது. அப்பொழுதுதான் லாபத்தைக் கைப்பற்றிக் கொள்ள இயலும்.




சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால், குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகலாம். அவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்க வழிபிறக்கும். கேதுவின் பார்வை 9,5ஆம் இடத்தில் பதிவதால் பெற்றோர்களால் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வாழ்க்கைத் துணையோடு ஒற்றுமையாக செயற்பட்டால், இல்லற வாழ்க்கை இனிதாக அமையும். பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. வழிபாட்டில் முழுமையாக கவனம் செலுத்தினால் வரும் துயரங்கள் ஓரளவாவது குறையும். கேது ஞானகாரகன் என்பதால் கல்வி முயற்சியில் ஆர்வம் கூடும். புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது விழிப்புணர்வோடு இருப்பது நல்லது. சான்றோர்களின் ஆலோசனை தக்கவிதத்தில் கைகொடுக்கும். சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கிறது. எனவே யோக பலம் பெற்ற நாளில் 'நாக சாந்தி' பரிகாரங்களை, அனுகூலம் தரும் ஸ்தலங்களுக்கு சென்று செய்து வருவது நல்லது.

**அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம்**

2.9.2017இல் குரு, துலாம் ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை வெற்றிகள் ஸ்தானத்தில் வீற்றிருந்த குரு, இப்பொழுது சுக ஸ்தானத்திற்கு வருகிறார். அர்த்தாஷ்டம குருவாக இருக்கிறாரே, அதனால் ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படுமோ? என்று நினைக்க வேண்டாம். உங்கள் இராசியைப் பொறுத்தவரை குரு, 6,9 ஆகிய இடங்களின் ஆதிபத்தியத்தைப் பெற்றுள்ளார். பூர்வீகச் சொத்துகளால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். புதிய உத்தியோகத்திற்காக ஏற்பாடு செய்திருந்தால் அதிலும் அனுகூலத்தைக் கொடுப்பார்.

அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும், அதன் பார்வை 8ஆம் இடத்தில் பதிவதால் மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். சென்ற ஆண்டு தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் கைகூடிவரும்.

மற்றவர்களின் துணையோடு, புதிய ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்வீர்கள். பத்திரப் பதிவில் இருந்த தாமதம் விலகும். சுப விரயங்கள் அதிகரிக்கும். பாதியில் நின்றிருந்த கட்டடப் பணி தொடரும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். உங்களைவிட்டு விலகிச் சென்றவர்கள், இப்பொழுது விரும்பி வந்து சேருவர். செய்யும் தொழிலில் சீரான வளர்ச்சி உண்டு. அரசுத்துறையில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளில் திடீர் மாற்றம் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது. பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் சென்று வழிபடுவதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

இராசிக்கு 5ஆம் இடத்தில் இருந்த சனி 6ஆம் இடத்திற்குச் செல்கிறார். 16.12.2017 முதல் அங்கு சஞ்சரித்து அற்புதமான பலன்களை அள்ளி வழங்கப் போகிறார். உங்களுக்கு அஷ்டமாதிபதியாகவும், சப்தமாதிபதியாகவும் விளங்குபவர் சனி. அவர் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத ராஜயோக முறையில் நற்பலன்கள் இல்லம் தேடி வரும். நீண்ட நாளைய எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும். சந்தர்ப்பங்களைச் சாதகமாக மாற்றிக் கொள்வீர்கள். காரியங்களில் இருந்த குறுக்கீடுகள் அகலும். செல்வாக்கு உயரும்.

வெளிநாட்டுப் பயணம் எண்ணியபடி வாய்க்கும். சப்தமாதிபதியாக சனி விளங்குவதால், வாழ்க்கைத் துணையோடு சிறுசிறு பிரச்சினைகள் வரலாம். குடும்ப விடயங்களை மூன்றாம் நபர்களிடம் சொல்வதன் மூலம் பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுக்கலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். விக்னேஸ்வரன், சர்வேஸ்வரன், நந்தீஸ்வரன், முனீஸ்வரன், சனீஸ்வரன் ஆகிய ஐந்து ஈஸ்வரர்களும் இணைந்திருக்கும் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 18.4.2017 வரை) ஒரு சிலருக்கு பணி மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் உருவாகலாம். பாதியில் நின்ற கட்டடப் பணி தொடரும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள், உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவர்.

புதன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 22.4.2017 வரை) சுபச்செலவு கூடும். திருமண முயற்சி கைகூடும். வாகன மாற்றம் செய்வீர்கள்.

குரு வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 31.5.2017 வரை) எதிரிகள் விலகுவர். லாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் செய்பவர்களுக்கு ஒரு கடனை அடைத்து, மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை வரலாம்.

சனி வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 6.8.2017 வரை) தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள். பணியாளர் மாற்றங்கள் நிகழும். பிரிந்த உறவினர்கள் இணையும் வாய்ப்பு உண்டு.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

ஆறுமுகப் பெருமான் வழிபாடு உங்களுக்கு ஆனந்தத்தை வழங்கும் என்பதால் குன்றக்குடியில் உள்ள சண்முகநாதனை வழிபாடு செய்வது நல்லது. பௌர்ணமி வழிபாடும் பலன் தரும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

**கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு**

இந்தப் புத்தாண்டு, சச்சரவுகள் இல்லாத ஆண்டாக அமையப் போகிறது. நல்ல சந்தர்ப்பங்கள் எல்லாம் தேடி வரப்போகிறது. உடல்நலம் சீராகி உள்ளத்தை மகிழ்விக்கும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொல்லை வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். குடும்பத் தகராறுக்கு காரணமாக இருந்தவர்கள் விலகுவர். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் அமைப்பு உருவாகும். தொழில் தொடங்கும் பொழுது, குடும்பப் பெரியவர்கள் உங்கள் பெயரையும் பரிசீலிக்க சொல்வர். பொதுவாகவே பொருளாதார நிலை சென்ற ஆண்டைவிட கூடுதலாக இருக்கும். கலைத்துறையைச் சார்ந்தவர்களுக்கு பாராட்டுக் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். தாமதப்பட்ட பதவி கிடைத்து தக்க விதத்தில் மகிழ்ச்சி காண்பீர்கள்.

# மன உளைச்சலே நோய் பாதிப்புக்கு காரணம்

## மருத்துவ உலகம்

Health-Care

உங்கள் நலம் உங்கள் கைகளில்

அதிக நோய் பாதிப்பிற்கு காரணம் மனிதனின் அதிக மனஉளைச்சலே என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒருவர் உண்ணும் பொழுது அதிக மனஉளைச்சலுடன், இருந்தால் அவரது நோய் எதிர்ப்பு சக்தி குறையும்.

இந்தியாவில் உள்ள நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை சுமார் 68 மில்லியன். உலகில் நீரிழிவு நோய் பாதிப்புடையோர் எண்ணிக்கை 381 மில்லியன்கள்.

இரத்த கொதிப்பு, நீரிழிவு நோய் பாதிப்பு இவற்றினால் இவற்றுக்கான மருந்துகளை வாங்குவதில் 8 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே கூட சென்று விடுகின்றனர்.

அதிக நோய் பாதிப்பிற்கு காரணம் மனிதனின் அதிக மன உளைச்சலே என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒருவர் உண்ணும் பொழுது அதிக மனஉளைச்சலுடனும், வேதனையுடனும் இருந்தால் அவரது...

➢ நோய் எதிர்ப்பு சக்தி குறையும.

➢ வெள்ளை அணுக்கள் குறையும்.

➢ இன்சுலின் செயற்பாடு குறையும்.

➢ உடலில் அதிக சர்க்கரை குறையும்

➢ நல்ல மனநிலையோடு உண்ணும் பொழுது நோய் எதிர்ப்பு சக்தி கூடும்.

➢ இரத்தத்தில் வெள்ளை அணுக்கள் சீராய் இருக்கும்.

➢ இன்சுலின் செயற்பாடு முறையாய் இருக்கும்.

➢ சர்க்கரை முறையான அளவில் இருக்கும்.

ஆய்வுகள் கூறும் மற்றொரு செய்தி நோயிலிருந்து வெளி வருவோம் என்று முதலில் நம்பிக்கை வையுங்கள். இந்த எண்ணங்கள் உங்களது

➢ லிம்பிக் சிஸ்டம் இதில் பதிவாகும்.

➢ ஹைப்போதலாமஸ்மூலமாக நோய் எதிர்ப்பு சக்தி கூடும.

➢ பிட்யூட்டரி மூலமாக ஓமோன்கள்செயறபாடு சீராகும்.

➢ முறையற்ற உடல் செயற்பாடு சீராகும்.

➢ நோயிலிருந்து நிவாரணம் பெற முடியும்.

பிறருக்கு முன் வந்து உதவுபவர்கள் நீண்ட நாள் ஆரோக்கியத்துடன் வாழ்வதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. இதையெல்லாம் இங்கு எழுதுவதன் காரணம் நீரிழிவு நோயாளிகள் வாழ் வில் மிகவும் மனம் சோர்ந்து விடுகின்றனர். மன உளைச்சல் அதிகம் அடைகின்றனர். தன் நோயினைப் பற்றிய கவலையே அவர்களை முழுவதும் ஆட்கொண்டு விடுகின்றது. வாழ்க்கையின் பல நல்ல மகிழ்வுகளை தேவையின்றி இழந்து முடங்கி விடுகின்றனர். இதில் 85 சதவீத மக்கள் கண் பார்வை பாதிப்பு மற்றும் கண் பார்வை இழப்பினை அடைகின்றனர். 20-28 சதவீத மக்கள் சிறுநீரக பாதிப்பினை அடைகின்றனர். 50-70 சதவீத மக்கள் நரம்பு பாதிப்பினை அடைகின்றனர்.

அதிகம் சமைத்த உணவுகளாலும், பொரித்து, வறுத்த உணவுகளாலும் நீரிழிவு நோயாளிகளுக்கு அதிக தீமை என்பதனை இன்னமும் மக்கள் உணராமல் இருக்கின்றார்களே என்பது சிந்திக்க வைக்கின்றது. பதப்படுத்தி டின்னில் அடைக்கப்பட்ட உணவுகளால் இரத்தத்தில் அதிக சர்க்கரை கூடும் என்பதனை நகர்ப்புற மக்களுக்கு பலமுறை சொல்லும் அவசியம் ஏற்படுகின்றது.

அசைவம், பால், பால் சார்ந்த உணவுகளான க்ரீம், சீஸ் போன்றவற்றினால் அதிக சர்க்கரை இரத்தத்தில் கூடும். இவை அனைத்தும் மக்களுக்கு புரிந்திருந்தால், புரிந்தபடி நடைமுறைப்படுத்தி இருந்தால் இன்று நீரிழிவுநோயால் ஏற்படும் கடும் பாதிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். ஆக இதனை தினமும் திருக்குறள் போல திரும்ப திரும்ப படியுங்கள் எனச் சொல்ல வேண்டும். வாழ்க்கையின் போராட்டத்தால் சோர்வுறும் மனிதனுக்கு பழக்கப்பட்ட உணவு முறைகளிலிருந்து தன்னை மாற்றிக் கொள்ளும் உத்வேகம் இல்லை. இதுவே அவனது நோய் முற்றுவதற்குக் காரணமாகின்றது. ஆகவே சில எளிய முறைகளை அவனுக்குச் சொல்லித் தர வேண்டியது மருத்துவ உலகின் கடமை ஆகின்றது.

➢ சர்க்கரை, சர்க்கரை அதிகமாக புட்டியில் அடைப்பட்ட பானங்கள் - வெகு வேகமாய் இரத்தத்தில் சர்க்கரையினை ஏற்றும்

➢ பாலிஷ் செய்த அரிசி, கோதுமை உணவுகள் - எளிதில் சர்க்கரையினை கூட்டும்

➢ பழங்கள் - நார்ச்சத்து இருந்தாலும் அளவாய் உணபது நல்லது.

➢ காய்கறிகள் - சாலட் எனப்படும் சமைக்காத முறையில் - மிகச் சீரான அளவிலேயே சர்க்கரை இருக்கும்.

சர்க்கரை நோயாளிகள் என்றில்லாமல் அனைவருமே உணவுக்கு 1/2 மணி நேரம் முன்பு வெள்ளரி, தக்காளி, கொடைமிளகாய், கோஸ், பிஞ்சு சோளம், சின்ன வெங்காயம், சுரைக்காய் போன்ற காய்கறிகளில் 4-5 காய்கறிகளை தலா 50 கிராம் அளவு எடுத்து சுத்தம் செய்து துருவியோ, பொடிதாக அரிந்தோ அதில் சிறிது எலுமிச்சை சாறு கலந்து சாலட் என்ற முறையில் உண்ணலாம். மூன்று வேளையும் இவ்வாறு செய்யலாம்.

இருவேளை உணவிற்கு நடுவே ஏதேனும் ஓரிரு பழங்களில் சில துண்டுகளை எடுத்துக்கொள்ளலாம். இஞ்சியினை ஏதோ ஒரு வேளை எப்படியாவது சேர்த்துக்கொள்ளலாம். வட இந்தியர்கள் அநேகர் காலையில் 10 துளசி இலையும், சிறிது துண்டு இஞ்சியும் மென்று சாப்பிட்டு அரை மணி சென்ற பிறகே ஏதேனும் உட்கொள்கின்றனர். ஆக முறையான உணவுப்பழக்கமும், சுகாதாரமும் அநேக நோய்களை தவிர்த்து விடும் என்பதனை அறிய வேண்டும்.

நீரிழிவு நோயாளிகள் மட்டுமே இருதய நோய்க்கும் பக்கவாத பாதிப்பிற்கும் ஆளாகின்றனர் என்பதில்லை. அனைவருமே இத்தகு பாதிப்பிற்கு ஆளாகலாம். இயற்கையான முறையில் உங்கள் சர்க்கரை அளவினை நீங்கள் குறைக்கும் பொழுது உங்கள் உடல் கூடுதல் பாதுகாப்பு பெறுகின்றது. இன்றைய மனித சுமுதாயம் தன் முயற்சி என்பதனை உடல் ஆரோக்கியத்தில் அதிகமாய் தவறவிட்டு விடுகின்றனர். குறிப்பாக உணவுவிடயத்தில் அதிகம் தவறவிட்டு விடுகின்றனர் என்றே தெரிகின்றது. திரும்ப, திரும்ப வலியுறுத்த விரும்புவது முறையான உணவுப்பழக்கம் உங்களை மிகுந்த ஆரோக்கியத்துடன் வைக்கும் என்பது தான்.

இன்னொரு செய்தி

“நொறுங்க தின்றால் நூறு வயது” இதனை உண்மையாய் எத்தனை பேர் பின்பற்றுகின்றோம். இன்றிலிருந்து ஒவ்வொரு பிடி உணவினையும் நன்கு மென்று கூழாய் உண்ணுங்கள். இது ஒன்றே பல தீர்வுகளைத்தரும். ஆக மருத்துவம் என்பது நாம் முறையாய் வாழும் பொழுது கூட ஏற்படும் பிரச்சினைகளுக்கு மட்டுமே என்று இருந்தாலே சரியாய் இருக்கும் இல்லையெனில் மனிதன் தன் வாழ்வு முறையில் செய்யும் தவறுகளுக்கெல்லாம் மருந்து தான் தீர்வு என்று வாழ்ந்தால் நிரந்தர நோயாளியாகத்தான் வாழ வேண்டும்.

**பூண்டு**

இதனை அநேகரும் சமையலின் ஒரு முக்கிய பங்கு என்றே நினைத்திருக்கின்றனர். நம் முன்னோர் நமக்கு செய்த பல்வேறு நன்மைகளில் ஒன்று சமையலில் பூண்டு, மஞ்சள், இஞ்சி போன்றவற்றினை அன்றாடம் சேர்த்ததுதான். ஏன் என்று விளக்கப்படாமல் செய்த நனமைகளில் ஒன்று பூண்டு. இது சிறந்த மருத்துவர் பயனைத் தருகின்றது என்பதை சமீப காலமாக பல்வேறு வழிகளில் மருத்துவ உலகம் வலியுறுத்தி வந்தாலும் முழுமையாய் அறிந்தால் முறையாய் பயன்படுத்தலாம் என்பதனால் இதனை எழுதுகின்றோம். பாரம்பரிய வைத்திய முறையில் இதனை பற்றி கூறப்பட்டிருந்தாலும் பூண்டினைப்பற்றி விஞ்ஞான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

➢ ஆஸ்துமாவிற்கு நிவாரணம்- சுருக்கிய மூக்கினை எளிதாக்கி மூச்சினை திணறல் இன்றி இருக்கச் செய்யும்

➢ வலிப்பு நோய்க்கு நிவாரணம் - பூண்டினை அன்றாடம் உணவில் சேர்த்துக்கொள்ள வலிப்பு நோயின் தீவிரமும் அடிக்கடி ஏற்படும் தாக்குதலுக்கு குறையும்.

➢ கிருமி நாசினி- சுவாச மண்டலம், ஜீரண மண்டலம் இவைகளில் உள்ள கிருமிகளை வெகுவாய் நீக்கும.

➢ வலி நிவாரணம் தரும்- இழுத்து பிடிக்கும் வலிகள் குறிப்பாக வயிற்றில் தோன்றும் வலிகளுக்கு நிவாரணம் தரும்.

➢ வயிற்று குடல் பூச்சிகளை கொல்லும்.

➢ வயிற்றிலுள்ள காற்றினை நீக்கும்.

➢ உடலின் உஷ்ணத்தின் மூலம் வியர்க்கச் செய்யும். இதனால் இரத்த ஓட்டம் சீராகும்.

➢ சீரண சக்திக்கு உதவுகின்றது.

➢ கிருமி நாசினி

➢ சிறுநீர் முறையாய் வெளியேற உதவுகின்றது.

➢ மாதவிலக்கு முறையாய் நிகழ உதவுகின்றது.

➢ சளி வெளியேற உதவுகின்றது.

➢ சக்தி தருவது

➢ எய்ட்ஸ் நோயாளிகள் தினமும் சிறிது பூண்டு உணவில் சேர்க்க பரிந்துரைக்கப்படுகின்றது.

➢ இருதய இரத்த குழாய் அடைப்புகளுக்கு சிறந்தது.

➢ இரத்தம் கட்டி சிறு சிறு உருண்டைகளாக மாறுவதை தவிர்க்கின்றது.

➢ புற்றுநோய் உடையோருக்கு பலவித சிகிச்சைகள் அளிக்கும் பொழுது பக்க விளைவுகள் இல்லாதிருக்க குறைய பூண்டு உட்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

➢ நீரிழிவு நோயாளிகள் அன்றாட உணவில் பூண்டு சேர்த்துக் கொள்ள வலியுறுத்தப்படுகின்றனர்.

➢ இரத்த கொதிப்பு உடையோர் 1-2 பல் பூண்டு தினம் பயன்படுத்துவது இரத்தக் கொதிப்பினை கட்டுப்படுத்தும்.

➢ கெட்ட கொழுப்பு கரையும

கி.மு.200இல் இருந்தே பூண்டு மருந்தாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.மு. 1550 ஆண்டுகளில் எகிப்து நாடுகளில் இருதய பாதிப்பு, பூச்சிகடி இவற்றுக்கு பூண்டினையே பயன்படுத்தி உள்ளனர். கி. மு. 900களில் சளி, இருமல் இவற்றுக்கு சிறந்த நிவாரணியாக பயன்படுத்தி உள்ளனர். சோர்வை நீக்கும் டொனிக்காகவும் பயன்படுத்தி உள்ளனர். சமீபத்தில் விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் இரத்த குழாய் அடைப்புகளை நீக்க வல்லது எனவும் கெட்ட கொழுப்பினை நீக்கி இரத்தத்தினை மெலிதாக்கி இரத்த ஓட்டத்தினை சீர் செய்வதாகவும் கண்டு பிடித்துள்ளனர். குறிப்பாக உயர் இரத்த அழுத்தம் வெகுவாய் மட்டுப்படுவதாக கண்டுபிடித்துள்ளதால் மருத்துவ உலகில் இது அனைத்து முறை மருத்துவர்களாலும் பரிந்துரைக்கப்படுகின்றது.

இதனைஉண்பதற்கு அளவு இருக்கின்றது. பலர் 4-5 பல் பூண்டினை காலையில் பச்சையாக மென்று சாப்பிடுகின்றனர். ஆனால் இதனை சமையலில் சேர்த்து சாப்பிடுவதே எளிதான முறையாக கூறப்படுகின்றது. சமைப்பதால் இதன் மருத்துவ குணங்களை இது இழப்பதில்லை என்பதாலும் செரிமானத்திற்கும் உண்பதற்கு எளிதானது என்பதாலும் இவவாறு கூறப்படுகின்றது.


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/6709 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 42 செவ் 7 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: G/6715 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 12 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்:BSc, ACCA/ உதவிக் கணக்காளர் லண்டன் NOT PR<br>தொ.இ: B/6710 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:O/L/அரச தொழில்<br>தொ.இ: G/6716 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 32 செவ் 7 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:ACCA, BA/ உதவிக் கணக்காளர் லண்டன் NOT PR<br>தொ.இ: B/6711 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: ·G/6718 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 15<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6712 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 26 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:AAT, B.COM<br>தொ.இ: G/6735 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

# நெடுந்தூர ஏவுகணைகளை தயாரிக்கும் பணிகள் நிறைவு

## வடகொரியாவின் ஜனாதிபதி அறிவிப்பு



நெடுந்தூர ஏவுகணைகளை தயாரிக்கும் பணிகள் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு சபையும் அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. எனினும், தற்காப்பு என்ற பெயரில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை விடாமல் நடத்தி வருகிறது.

இந்த ஏவுகணைகள் அனைத்தும் வடகொரியாவில் இருந்து சுமார் 3400 கிலோமீற்றர் தொலைவில் மேற்கு பசுபிக் பெருங்கடலில் உள்ள குவாம் தீவில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க கடற்படை தளத்தை தாக்கி அழிக்கும் ஆற்றல் படைத்தவை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை ஐந்து முறை அத்துமீறலாக ஏவுகணை சோதனைகளை இந்நாடு நடத்தியுள்ளது.

வடகொரியாவின் இந்த அத்துமீறலுக்கு அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

ஆனாலும், மாதந்தோறும் ஒருமுறையோ, இருமுறையோ இந்த ஏவுகணை பரிசோதனைகளை மேற்கொள்ள வடகொரியா தவறுவதில்லை. வடகொரியாவின் இந்த ஆணவத்துக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையை பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தின.

இதன் அடிப்படையில் வடகொரியா மீது ஐ.நா.சபை சமீபத்தில் புதிய தடைகளை விதித்தது.

இந்நிலையில், புத்தாண்டு தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றிய வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், தடை செய்யப்பட்ட நெடுந்தூர ஏவுகணைகளை தயாரிக்கும் பணிகள் நிறைவு கட்டத்தை எட்டியுள்ளதாக தெரிவித்தார்.

அமெரிக்காவை தாக்கும் நோக்கத்தில்தான் இதைப் போன்ற நெடுந்தூர ஏவுகணைகளை வடகொரியா தயாரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலையக மக்களின் கோரிக்கைகள் 2017ஆம் ஆண்டில் நிவர்த்தியாகும்

"மலையக மக்கள் சார்பாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் யாவும், இந்த வருடத்துக்குள் நிவர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கை உள்ளது" என அக் கட்சியின் உபதலைவரும்மத்திய மாகாண முன்னாள் தமிழ்க் கல்வி அமைச்சருமான சந்தனம் அருள்சாமி தெரிவித்தார்.

இது தொடர்பில், தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "மலையக மக்களுக்கான வேலைத்திட்டங்கள் அடங்கிய கோரிக்கைகளை, இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், ஏற்கனவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடி சமர்ப்பித்துள்ளார்.

பெருந்தோட்ட மக்களுக்கும் மலையகத்துக்கும் தேவையான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், இந்தக் கோரிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், ஜனாதிபதியுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

அமைச்சுப் பதவியொன்றைக் கொண்டுள்ளோமோ இல்லையோ என்பது, இங்கு விடயம் இல்லை. ஆனால், ஜனாதிபதி மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் பிரகாரம் எமது நடவடிக்கைகள் தொடரப்படும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் இருந்து, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பங்குதாரராக இருந்துள்ளோம்.

அதேபோன்று, தற்போது ஜனாதிபதி தலைமை தாங்கும் கட்சிக்கும், நாம் எம்முடைய ஆதரவை வழங்குவோம் என்பதில் எவ்வித மாற்றமும் கிடையாது.

இ.தொ.காவின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் ஊடாக மலையகத்தில் பல்வேறான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்துள்ளார்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் 479 விபத்துக்கள்

(கொழும்பு)

கடந்த ஆண்டு புத்தாண்டுக் கொண்டாட்ட விபத்துகளை விட, இந்த புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது இடம்பெற்ற விபத்துகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக, கொழும்பு தேசிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்பிரகாரம், கடந்த 30 ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் மாத்திரம் 479 விபத்துகள் பதிவாகியுள்ளதாகவும் அவற்றில் 113 வீதி விபத்துகளும் உள்ளடங்குவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது, கடந்த வருடத்துடன் ஒப்பிடுமிடத்து, 13 சதவீதம் குறைவடைந்துள்ளதாக, தேசிய வைத்தியசாலையின் மக்கள் தொடர்பாடல் அலுவலகர் புஷ்பா ரம்யானி சொய்சா, நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதேவேளை, பட்டாசு கொளுத்தும் போது ஏற்பட்ட விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட 12 பேர், தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் இந்த் தொகை கடந்த வருடம் 10ஆக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

"வீடுகளில் இடம்பெற்ற விபத்துக்கள் காரணமாக 45 பேரும் கைகலப்புகளில் ஈடுபட்டதன் காரணமாக காயமடைந்த 48 பேரும், கீழே விழுந்தமையினால் காயம் ஏற்பட்ட 109 பேருமாக, மொத்தமாக 179 பேர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வீடுகளில் இடம்பெற்ற விபத்துக்கள் 43 சதவீதத்தாலும் வீதி விபத்துக்கள் 16 சதவீதத்தாலும் குறைவடைந்துள்ளன. மற்றைய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர், 52 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# விற்பனை ஆண்டு பிரகடனம்

## கூட்டு எதிரணி அறிவிப்பு



"பிறந்துள்ள 2017ஆம் ஆண்டு, விற்பனை ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது என ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்தது.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவ்வெதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, "அம்பாந்தோட்டைத் துறைமுக விற்பனையானது. இவ்வாண்டின் தொனிப்பொருளை உறுதி செய்துள்ளது" என்று தெரிவித்தார்.

"இந்த அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில், பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். நல்லாட்சி என்று முத்திரை பதித்துக் கொண்ட இந்த அரசாங்கம், இந்த 2017ஆம் ஆண்டை, விற்பனை ஆண்டாகப் பிரகடனப்படுத்திக்கொண்டு உள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்தப் பிரகடனம், உத்தியோகபூர்வமாக இல்லாவிடினும், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள், இந்தப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுத்தப்படுகின்றன" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# என் தாய்மொழி இசை; குரு ஜேசுதாஸ் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நெகிழ்ச்சி



(சென்னை)

என் தாய்மொழி இசை, என் குரு ஜேசுதாஸ் என பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நெகிழ்ச்சியுடன் கூறினார்.

திரையுலகில் பாடகராக 50 ஆண்டுகள் நிறைவானதை ஒட்டி, பத்திரிகையாளர்களை சந்தித்தார் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம். அப்போது, வெளிநாட்டில் "எஸ்.பி.பி.50" என்ற பெயரில நடைபெற்று வரும் நிகழ்ச்சியைப் பற்றி வீடியோ பதிவு ஒன்றைத் திரையிட்டார்கள்.

இச்சந்திப்பில் பாடகர் ஜேசுதாஸ்சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அங்கு எஸ்.பி.பி. குடும்பத்தினர், ஜேசுதாஸ் மற்றும் அவருடைய மனைவிக்கு பாத பூஜை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து பேசிய எஸ்.பி. பாலசுப்பிரமணியம் "பாட ஆரம்பித்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை என்னால் நம்ப முடியவில்லை. 50 வருடங்கள் என்பது சாதனை அல்ல. ஜேசுதாஸ் அண்ணா 55 வருடங்களாகப் பாடி வருகிறார். ஜானகி, சுசிலா, லதா மங்கேஷ்கர் போன்றவர்கள் 75 வருடங்களுக்கு மேல் பாடி வருகிறார்கள்.

என் மனதுக்கு மிகவும் பிடித்த பாடகர் முஹம்மது ரஃபி. அவருக்குப் பிறகு எனக்கு மிகவும் நெருக்கம் என் அண்ணா ஸ்ரீஜேசுதாஸ் தான். அவருடைய ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. என் குரு ஜேசுதாஸ். அவருக்கு காணிக்கை செலுத்தும் விதமாக நான் பாத பூஜை செய்தேன். அவர் ஒரு ரிஷி, யோகி. அவருக்கு மாதிரி ஒரு குரல் கிடைப்பது பூர்வஜென்ம புண்ணியம்.

நான் முறையாக சங்கீதம் கற்றுக்கொள்ளாமல், சினிமாவுக்கு பாட வந்தேன். என் தாய்மொழி இசை. 16 அல்லது 17 வயது இருக்கும் போது, ஒரு மேடைக் கச்சேரியில் பாடினேன். அப்போது என் பாடலை கேட்டு, ஜானகி அம்மா, "நீ சினிமாவுக்கு வந்தால் பெரிய பாடகராகி விடுவாய். முயற்சி செய்" என்று சொன்னார். அப்படித்தான் சினிமாவில் முயற்சி செய்து பாடகரானேன்.

அதனைத் தொடர்ந்து என்னை விட பல சீனியர் பாடகர்கள் நான் வளர்வதற்கு பெரும் உறுதுணையாக இருந்தார்கள். அவர்களிடமிருந்து நிறையக் கற்றுக் கொண்டேன். இப்போதும், எனக்கு மைக் முன்னாடி எப்படி பாடுகிறேன் என்று கேட்டால் தெரியாது. ரஜினி, கமல், அனில்கபூர் உள்ளிட்ட பலருக்கு தெலுங்கில் டப்பிங் பேசியிருக்கிறேன். எனக்காக பலரும் வேடங்களை உருவாக்கிக் கொடுத்தார்கள். சில நல்ல கதாபாத்திரங்களில் நடித்தும் இருக்கிறேன்.

நிறைய தயாரிப்பாளர்கள், நான்தான் பாட வேண்டும் என பாடல்கள் கொடுத்தவர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், இசைக்கருவி வாசித்த எத்தனையோ நல்லவர்கள், பதிவு செய்தவர்கள், நன்றாக நடித்த நடிகர்கள் மற்றும் இசையைக் கேட்டு ரசித்தவர்கள் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2016 இல் 50,000 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

2016ஆம் ஆண்டு, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த 12 மாதங்களில் 77 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 50,519 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு சுட்டிக்காட்டியது.

மேல் மாகாணத்திலேயே 49.46 சதவீதமானவர்கள் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய 3,407 பேர் கொழும்பு மாநகரத்துக்குட்பட்ட பகுதிகளிலும் 12,014 பேர் கொழும்பை அண்டிய பகுதிகளிலும் என 15,421 பேர் கொழும்பு மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், கம்பஹா - 6,263, களுத்துறை - 3,303, இரத்தினபுரி - 2,969, காலி - 2,702, குருநாகல் - 2,415, யாழ்ப்பாணம் - 2,227, புத்தளம் - 1,002, மட்டக்களப்பு - 537 மற்றும் அம்பாறை - 238 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் மூன்று நாட்கள் காய்ச்சல் தொடர்ந்தும் நீடிக்குமாயின் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (இ-7)



காரைநகர் பிரதேச செயலகம். கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபையுடன் இணைந்து நடத்திய கலாசார விழா அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம். சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும், கலங்கரை - 2016 என்ற மலர் வெளியிடப்பட்டது. ஆறு கலைஞர்கள் கலைஞானச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)



மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்வதில் துவிச்சக்கரவண்டிகள் இல்லாது சிரமப்படுவதாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கமைவாக அண்மையில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைச் செயலகத்தில் வைத்து சமூக நற்சிந்தனையாளனும் ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தருமான சி. சபாநாதனினால் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ச.வைஸ்ணவி மற்றும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவன் கார்த்திகன் ஆகியோருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



புதுவருடத்தன்று கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் உத்தியோகத்தர்கள் காலை 8.30 மணியளவில் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு சென்று விநாயகரை தரிசித்த போது (படங்கள்:- மகாலிங்கம்)



சென் றோக்ஸ் சனசமூக நிலைய யோகம் கலையரங்க முன்பகுதியில் மரநாட்டு விழா நடைபெற்றது. சென் றோக்ஸ் சனசமூக நிலையத் தலைவர் அ. அருள்பிரகாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூகத்தில் மூத்த உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களால் மரக்கன்றுகள் நாட்டப்படுவதையும் உறுதுணையாக சேவை செய்யும் மாதர் கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



யாழ். மண்ணின் இலக்கியவாதிகள் மற்றும் ஆர்வலர்களுக்கும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிற்காக இந்தியா மற்றும் மலேசியா நாடுகளில் இருந்து வருகை தந்த அறிஞர்களுக்கும் இடையிலான சந்திப்பு நல்லூர் கம்பன் கோட்டத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வடமாகாணசபை உறுப்பினர் அ.அஸ்மின், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், கவிஞர் சோ.பத்மநாதன், கவிஞர் த.ஜெயசீலன், கவிஞர் கு. றஜீபன், கவிஞர், தமிழாசிரியர் வேல்.நந்தகுமார், எழுத்தாளர் வே.சிவராஜா, சீனா உதயகுமார், இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கா.வைத்தீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ தியாக மயூர கிரிக் குருக்கள், கலாபூஷணம் எம்.எல்.லாபிர், கவிஞர் வேலணையூர் சுரேஷ் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.




# சிறுவர் அரங்கம்

# மர்ம பங்களா

..அன்றிரவு கால்வின் யாருக்கும் தெரியாமல் உள்ளே சென்றான். போனவன் என்ன ஆகியிருப்பான்? வாங்க பார்ப்போம். விடிந்த பிறகு ஊர் தலைவனிடம் புகார் போனது. கொதித்து எழுந்து சென்றார். அங்கே பொலிஸ்காரர்கள் மூன்று பேரை பிடித்து ஊர் மக்களின் முன்னிலையில் அடித்தார்கள். ஊர் தலைவன் வந்து நின்றார். கால்வின், அவர் முன் நின்றான். கால்வின், அவரை பார்த்து சொன்னான். உங்களின் தில்லு முள்ளு அம்பலமாகிவிட்டது. ஊர் மக்களின் பிரதிநிதி நான் என்னுடைய பங்களாவில் நான் எதுக்காக தில்லு முள்ளு ஆட வேண்டும் என்றார்.

அடுத்த நிமிடம் கால்வின், சார் அது எனக்கு சொந்தமான பங்களா. ஊர் தலைவர் அதிர்ச்சிக்குள்ளானார். என்ன ஒரு ஆங்கிலேயன் பாழடைந்த பங்களாவுக்கு சொந்தம் கொண்டாடுவதா? இதை நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன். உடனே போ பொலிஸ்காரர் அவர் சொல்வது உண்மைதான். இந்த பங்களா பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ஆங்கிலேயர்கள் கட்டியது. அதாவது கால்வினின் பாட்டன் கட்டியது. கால்வினின் பாட்டன் தமிழ் நாடு வந்தால் அங்கே தான் தங்குவார். அது மட்டும் இல்லாமல்



அவர் பிரிட்டிஷ் காலத்தில் மாவட்ட கலெக்டர்ராக இருந்து வந்துள்ளார். அதற்கு ஆதாரமாக நில பட்டா பத்திரம் கால்வினிடம் உள்ளது பாருங்கள். அவருடைய பங்களாவை பற்றி வதந்தி பரவியதால் உண்மையை கண்டறிய பல வருடங்கள் கழித்து இங்கே வந்துள்ளார் கால்வின், வந்த சில நாட்களிலே என்னிடம் எல்லா தகவலையும் சொல்லி பங்களாவுக்குள் என்ன நடக்கிறது என்று பார்க்கவும் சோதனை இடவும் ஐயம் கொண்டோம். ஆனால் இதற்கு முன்னாள் ஏற்கனவே அந்த பங்களாவுக்குள் நுழைந்த நான்கு பள்ளிக்கூட நண்பர்களில் ஒருத்தனை சந்தித்து விசாரித்தோம்.

அந்த பையனும் இப்போ இங்கே வந்துள்ளான். சொல்லுங்க ஊர் தலைவர் அவர்களே, இனிமேல் நீங்கள் தான் சொல்ல வேண்டும். ஏன் இந்த காத்து கருப்பு நாடகமெல்லாம்.

சொல்றேன் என்று வேறு வழி இன்றி சொல்ல ஆரம்பித்தார்.

(தொடரும்...)

01.2017 03

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் கைது செய்யப்பட்டு பியேர் கவுச்சோன் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
- 1496 - லியொனார்டோ டா வின்சி தனது பறக்கும் இயந்திரம் ஒன்றை சோதனையிட்டது வெற்றியளிக்கவில்லை.
- 1653 - இந்தியாவில் கிழக்கத்தியத் திருச்சபை குடியேற்றவாத போர்த்துக்கீசரிடம் இருந்து விலகியது.
- 1754 - அம்பலப்புழாவில் நடைபெற்ற சண்டையில் கொச்சி அரசரதும், நாடிழந்த ஏனைய அரசர்களினது கூட்டுப்படைகளைத் தோற்கடித்து அவரை எதிர்த்தவர்கள் அனைவரையும் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் முறியடித்தார்.
- 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா கைப்பற்றியது.
- 1859 - தமிழகத்தில் போளூர் பகுதியில் நிலநடுக்கம் பதியப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதில்லை என டெலவெயர் வாக்களித்தது.
- 1870 - புரூக்ளின் பாலம் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாயின.
- 1888 - 91 சமீ முறிவுத் தொலைநோக்கி முதன் முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப் பெரும் தொலைநோக்கி ஆகும்.
- 1921 - துருக்கி ஆர்மேனியாவுடன் அமைதி உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டது.
- 1924 - பண்டைய எகிப்தின் துட்டன்காமன் மன்னன் அடக்கம் செய்யப்பட்ட பெட்டியை பிரித்தானியாவின் தொல்லியலாளர் ஹவார்ட் கார்ட்டர் கண்டுபிடித்தார்.
- 1932 - பிரித்தானியர் மகாத்மா காந்தி மற்றும் வல்லபாய் பட்டேல் ஆகியோரைக் கைது செய்தனர்.
- 1956 - ஈபெல் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் கோபுரத்தின் மேற்பகுதி சேதமடைந்தது.
- 1957 - முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.
- 1958 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.
- 1959 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவின் 49வது மாநிலமானது.
- 1961 - அமெரிக்க அரசு கியூபாவுடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டது.
- 1961 - இடாகோவில் அணுக்கரு உலை ஒன்றில் ஏற்பட்ட கசிவின் காரணமாக மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1962 - இருபத்திமூன்றாம் யோவான் (திருத்தந்தை) பிடல் காஸ்ட்ரோவை மதவிலக்கு செய்து அறிவித்தார்.
- 1966 - இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் டாஷ்கெண்டில் ஆரம்பமாயின.
- 1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.
- 1976 - அனைத்துலக பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது.
- 1977 - ஆப்பிள் கணினி நிறுவனமயப்படுத்தப்பட்டது.
- 1990 - பனாமாவின் முன்னாள் ஜனாதிபதி மனுவேல் நொரியேகா அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.
- 1994 - ரஷ்யாவின் இர்கூத்ஸ்க்கில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று தரையில் மோதி வெடித்ததில் 125 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு பேச்சுக்களின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.
- 2004 - எகிப்திய விமானம் ஒன்று செங்கடலில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 148 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1740 - கட்டபொம்மன், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட மன்னன். (இ. 1799)
- 1840 - தந்தை தமியான், கத்தோலிக்கத் துறவி. (இ. 1889)
- 1892 - ஜே. ஆர். ஆர். டோல்கீன், ஆங்கிலேய எழுத்தாளர். (இ. 1973)
- 1925 - டி. கே. புஷ்பவல்லி, திரைப்பட நடிகை.
- 1953 - முகமது வாகித் அசன், மாலைதீவு அரசுத்தலைவர்.
- 1956 - மெல் கிப்சன், அவுஸ்ரேலிய நடிகர்.
- 1969 - மைக்கேல் சூமாக்கர், ஜெர்மனியைச் சேர்ந்த பார்முலா 1 ஓட்டுனர்.
- 1978 - லியா கெபிடே, எத்தியோப்பிய-அமெரிக்க நடிகை.

### இறப்புகள்

- 235 - அந்தேருஸ் (திருத்தந்தை).
- 1795 - சோசியா வெட்ச்வூட், ஆங்கிலேய மட்பாண்ட உற்பத்தியாளர். (பி. 1730)
- 2013 - எம். எஸ். கோபாலகிருஷ்ணன், இந்திய வயலின் கலைஞர். (பி. 1931)
- 2005 - ஜே. என். டிக்சித், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர். (பி. 1936)
- 2014 - ம. சா. அறிவுடைநம்பி, தமிழ்ப் பேராசிரியர். (பி. 1954)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 50 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 100 | 100 | 120 | 200 | 200 |
| தக்காளி | 180 | 100 | 120 | 170 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 70 | 60 | 70 |
| கோவா | 20 | 50 | 20 | 30 | 40 | 30 |
| கரட் | 80 | 100 | 80 | 90 | 160 | 80 |
| பூசணி | 60 | 80 | 35 | 50 | 60 | 50 |
| புடோல் | 70 | 80 | 50 | 70 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 80 | 40 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 280 | 400 | 200 | 240 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 300 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 150 |
| பயற்றங்காய் | 150 | 100 | 150 | 140 | 120 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 80 | 100 | 70 |
| கறிமிளகாய் | 180 | 200 | 180 | 160 | 280 | 120 |
| முருங்கைக்காய் | 350 | 200 | 300 | 400 | 400 | — |
| போஞ்சி | 100 | 200 | 60 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 | 30 | 40 | 30 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 20-40 | 35 | 40-60 | 50 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 100 | — | 220 | 280 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 15 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 150 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 60 | 100 | 60 |

# புதிய அரசியலமைப்பு தொடர்பில் 3 நாட்களுக்கு த.தே.கூ.ஆராயும்

## அக்கட்சியின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



**(கொழும்பு)— எதிர்வரும் 9,10,11ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் கூடவுள்ளது. இதற்கு முன்னதாக புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஆராயவுள்ளோம். இதற்கமைய 6 ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 நாட்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடி கலந்தாலோசிக்கவுள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

இந்தக் கலந்துரையாடலுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஆராய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி கொழும்பில் கூடவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் கூடவுள்ள இக்கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் அமைப்புத் திட்டம், உப குழு அறிக்கை தொடர்பான மூன்று நாட்கள் விவாதம், கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், "புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஆராய்வதற்கு கூடவுள்ள கலந்துரையாடலுக்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, இக்கலந்துரையாடலில் நாம் நிச்சயம் கலந்துகொள்வோம் எனத் தெரிவித்தார். (இ-7)

# நல்லாட்சியை கவிழ்க்க முடியாது



## அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு

"நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, ஜோக்கராக மாறியுள்ளார். இந்த நல்லாட்சி அரசாங்கத்தைப் பிரிக்கப் போவதாக அவர் கூறி வருகின்ற போதிலும், அது ஒரு போதும் இயலாத காரியமாகும்" என்று, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். மொனராகலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர், "தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்க, எவராலும் முடியாது. 2017ஆம் ஆண்டு என்பது, இந்த அரசாங்கத்துக்கு முக்கியமானதும் சிறந்ததுமான ஆண்டாகும்" என்றார். அத்துடன் "தேசிய அரசாங்கத்துககு, நாடாளுமன்றத்தில் 160 ஆசனங்கள் உள்ளன. அதனை ஒருவராலும் அசைத்துவிட முடியாது என்று" அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மேலும் இரு இராஜாங்க அமைச்சர்கள் இராஜினாமா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிப்போருக்கு இடையிலான தீர்க்கமானதொரு கலந்துரையாடல், இம்மாதம் இரண்டாவது வார காலப்பகுதியில் இடம்பெறவுள்ளதாக, அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே, இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக, அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின் போதே, அரசாங்கத்தை விட்டு விலகுவதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும் என்றும், அவர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின் போது, புதிய வருடத்தில் முக்கியமானதொரு தீர்மானம் எட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சுப் பதவி வகிக்கும் இருவர், அப்பதவிகளை இராஜினாமா செய்யவுள்ளதாகவும், அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அடுத்த வாரக் காலப்பகுதியில், அவ்விருவரும் தங்கள் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வர் என்றும், அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற விவகார இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன, கடந்த 30ஆம் திகதியன்று, தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இவரைத் தொடர்ந்து பலர், அரசாங்கத்தை விட்டு விலகி, ஒன்றிணைந்த எதிரணியுடன் இணையவுள்ளனர் என்று, அவ்வெதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (இ-7)

# புதிய அரசியலமைப்பு தொடர்பான சு.கவின் நிலைப்பாடு அடுத்தவாரம்

புதிய அரசியல் அமைப்பு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு அடுத்த வாரம் அறிவிக்கப்பட உள்ளது.

அரசியலமைப்பு உருவாக்க செயற்குழுவிடம் இது குறித்து அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து மற்றும் சிவில், விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அனர்த்த முகாமைதுவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் பெருந்தெருக்கள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா உள்ளிட்ட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் புதிய அரசியல அமைப்பு குறித்து கலந்துரையாடி கட்சியின் நிலைப்பாடு பற்றி அறிவிக்கவுள்ளனர்.

அரசியல் அமைப்பு உருவாக்க செயற்குழு எதிர்வரும் 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் கூடவுள்ளது.

புதிய அரசியல் அமைப்பு குறித்த கட்சியின் நிலைப்பாடு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்தாலோசித்த பின்னர் இறுதி நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும் என அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். (இ-3-7)

# இன்று ஒரு தகவல்

## எடுத்ததுமே ஏமாற்றத் தொனியா?

சில நேரங்களில் மிகக் கடுமையான கவலைகளைக்கூட மிகச் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். சில நேரங்களிலோ ஒரு சாதாரண பேனா தொலைந்து போனால்கூட, வேறு வேலையே ஓடலை! என்று சொல்லுமளவு பாதிக்கப்பட்டு விடுகிறோம்.

ஓர் ஏமாற்றுப் பேர் வழியிடம் ஆயிரம் ரூபாய் ஏமாந்துவிடுகிற போது ஏற்படுகின்ற பாதிப்பை விட , மனவருத்தத்தை விட தியேட்டரில் ரிக்கெட் கிடைக்காமல் ஹவுஸ்புல் போர்ட்டைப் பார்த்து திரும்பும் போது ஏற்படுகின்ற வருத்தம் சிலருக்கு அதிகமாக இருக்கிறது.

என்ன ஒரு வியப்பான விடயம்! தியேட்டரிலோ பர்சுக்கு வேலை இல்லாமல் போய்விட்டதே- பணம் நம்மிடமே இருக்கிறதே என்று கவலைப் படுகிறோம். ஏமாற்றப்பட்டு பணம் போய்விட்ட நிலையிலும் கவலைப்படாமல் இருக்கிறோம்.

இதற்கு என்ன காரணம்?

பல காரணங்கள்?

முக்கியமாக,இரண்டைச் சொல்லலாம். அந்தக் கணத்தில் உள்ள மனநிலை. அடுத்த காரணம் சூழ்நிலை.

மனம் உற்சாகமாக இருக்கும் போது பெரிய கவலைகள் கூட நம்மை ஒன்றும் செய்வதில்லை.

அது சோர்ந்தும் துவண்டும் இருக்கும் போதோ சாதாரண பிரச்சினை கூட பூதாகாரமாகத் தெரிகிறது.

ஆக, ஒரு பிரச்சினையின் வீரியம் என்பது அல்லது கடுமை என்பது அந்தப் பிரச்சினையை எத்தகைய மனநிலையில் நாம் சந்திக்கிறோம் என்பதைப் பொறுத்தே அமைகிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது இல்லையா?

இந்த உண்மையை நாம் சரிவரப் புரிந்து கொண்டால் நம் மனதை நாம் நன்கு தயார் செய்து எத்தகைய பிரச்சினைகளையும் எத்தகைய கவலைகளையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியும்.

தத்துவார்த்தங்களின் மூலமாகவும் நாம் நம் பிரச்சினைகளை எளிதாக்கிப் பார்க்க முடியும். இதற்கு நல்ல மனப்பக்குவம் வேண்டும்.

முதல் கட்டமாக , நம்மைப் பாதிக்கின்ற விடயங்களை, பதற்றப்படாமலும் சாதாரணமாகவும் ஏதோ சம்பந்தமே இல்லாத ஒருவர் போலவும் நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இது சாத்தியமா? என்பீர்கள். சாத்தியம் மெல்ல மெல்லச் சாத்தியம். மனம் வைத்தால் விரைவிலேயே சாத்தியம்.

ஓர் ஓடிட்டருக்கு அவருடைய வாடிக்கையாளர் தான் அனுப்ப வேண்டிய பைலை அனுப்பவில்லை. அன்றே அதை வருமான வரி அலுவலகத்தில் சேர்ப்பித்தாக வேண்டும். ஓடிட்டரைத் தேடிப் பிடித்து பைல்.இன்று வராது என்று சொல்ல வேண்டிய பொறுப்பு என்னிடம் தரப்பட்டது; சொன்னேன்.

ஓடிட்டர் ரொம்பவும் அதைப் பிரச்சினையாக்குவார் என்று எதிர்பார்த்தேன். பரவாயில்லை சேர்! டைம் கேட்டுக்கிறேன் என்று கதையை உடனே முடித்துவிட்டார்.

ஐயையோ ! பைல் தரலையா? இப்போ என்ன சேர் பண்றது? பொறுப்பில்லாத மனுஷன் சேர்! இன்னிக்கு சப்மிட் பண்ணியாகணுமே! என்று மட்டுமே ஆரம்பித்திருந்தால் அது எல்லாருக்குமே கவலையைத் தந்திருக்குமே. அவரோ ஏமாற்றத் தொனியே சிறிதும் இல்லாமல் கேட்டுக் கொண்டார். அதனால் பிரச்சினை எளிதாயிற்று.

பிரச்சினை- கவலைப்படல்- தீர்வு காணல் என்ற வரிசை முறையில் கவலைப்படல் எனும் கட்டத்தை ஒரேயடியாகத் தாண்டி நேரடியாகத் தீர்வு காணல் எனும் கட்டத்திற்குப் போய்விட வேண்டும். நடுக்கட்டத்திலேயே நின்று கொண்டிருக்கக்கூடாது .

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

## ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்




எந்த முன்முடிவுகளும் இல்லாமல், அகங்காரம் அற்ற வார்த்தைகளை தன் ஆன்மாவிலிருந்து பொறுக்கி எடுத்து உரையாடும் போது எவர் மனதையும் வென்றெடுக்க முடியும் தானே...? இங்கு எவரையும் வென்றெடுத்து எதுவும் ஆகப்போவதில்லை. ஆனால், அதுபோன்ற உரையாடல்களால், ஒரு இணக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தலாம் தானே...? அதுபோன்ற ஒரு உரையாடலுக்காகத் தான், ஜெயலலிதா கண்ணீரால் வார்த்தைகளை ஈரப்பிசுபிசுப்பாக்கி வைத்து காத்திருந்தார். அந்த ஈரத்தில் எம்.ஜி.ஆரின் மனதை கரைத்துவிட வேண்டும்... மீண்டும் அவர் மனதில் இடம்பிடிக்க வேண்டும். அதன் மூலம் கட்சியிலும் முக்கியத்துவம் பெற வேண்டும். ஆனால், அது நிகழ அல்லது அதை நிகழ்த்த ஜெயலலிதா பெரும்பாடு தான் பட்டார்.



**'கோபமடைந்த எம்.ஜி.ஆர்.'**

அமெரிக்காவிலிருந்து திரும்பிய எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவைச் சந்திப்பதைத் தவிர்த்தார். அமெரிக்காவிலிருந்து அவர் திரும்பியதும், அவரிடம் இங்கு நிகழ்ந்தது அனைத்தையும் சொல்லி, தனக்கு ஏற்பட்ட அநீதியை விபரித்து முறையிடலாம் என்று நினைத்திருந்த ஜெயலலிதாவுக்கு, எம்.ஜி.ஆர். தன்னை தவிர்ப்பது விபரிக்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியது.

எம்.ஜி.ஆர். எப்போதும் தன் அனுமதி இல்லாமல் கட்சிக்காரர்கள், பத்திரிகையாளர்களை சந்திப்பதை விரும்பியதில்லை. ஊடகங்களை அவரே கையாண்டார். ஆனால், ஜெயலலிதா இந்த விதியை மீறினார். பத்திரிகையாளர்களைச் சந்தித்து பரபரப்பைக கிளப்பினார். இது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தியது. "நான் உடல்நிலை சரி இல்லாமல் வைத்திய சாலையில் இருக்கும் போது பத்திரிகையாளர்களை மட்டும் சந்தித்து இருந்தால் பரவாயில்லை... குழப்பங்களை விதைத்து இருக்கிறார். அது மட்டுமா? தன் மனைவி ஜானகியைப் பற்றியும் தவறாகப் பேசி இருக்கிறார்... இனி, ஜெயலலிதாவை தொலைவிலேயே வைக்க வேண்டும்" என்ற முடிவுக்கு வந்தார்.



சென்ற அத்தியாயத்தில் ஜெயலலிதா டில்லியில் பேட்டி கொடுத்தார் என்று பார்த்தோம் அல்லவா...? அந்த பேட்டியில், ஜானகி - எம்.ஜி.ஆர். திருமண பந்தம் குறித்தும் சில வார்த்தைகளை பேசி இருந்தார். இதுதான் எம்.ஜி.ஆரை மிகவும் கோபப்படுத்தியது. எதை மறந்தாலும், மன்னித்தாலும்... ஜானகியை தவறாகப் பேசியதை மன்னிக்க அவர் தயாராக இல்லை.

ஜெயலலிதாவை எம்.ஜி.ஆர். ஓரம்கட்டியதைப் பார்த்து, கட்சியின் முன்னணித் தலைவர்கள் அகம் மகிழ்ந்துதான் போனார்கள். இனி எப்போதும், ஜெயலலிதா - எம்.ஜி.ஆர். சந்திப்பு நிகழ்ந்து விடக் கூடாது என்பதில் கண்கொத்திப் பாம்பாக கவனித்துக் கொண்டார்கள். ஆம், அவர்களுக்கு நன்கு தெரிந்து தான் இருந்தது. மீண்டும் இருவரும் சந்தித்தால், ஜெயலலிதா, எம்.ஜி.ஆரின் மனதைக்கரைத்து விடுவார என்று... இறுதியில் அது தான் நிகழ்ந்தது.

**'டில்லியில் நிகழ்ந்த சந்திப்பு'**

அமெரிக்காவில் இருந்து திரும்பிய பின்னர் குரல் சிகிச்சைக்காக எம்.ஜி.ஆர். ஜப்பான் சென்றிருந்தார். டில்லி வழியாக தமிழகம் திரும்புவது தான் திட்டம். ஜெயலலிதா எம்.ஜி.ஆரை டில்லியில் சந்திக்கத் திட்டமிட்டார். அங்குதான் மற்றவர்கள் தொல்லை இல்லாமல் சந்திக்க முடியும் என்பது அவரது எண்ணம். அவரது எண்ணமும், திட்டமும் வீண் போகவில்லை. இருவரும் சந்தித்தார்கள்.

தன் கண்ணீருடன் கூடிய வார்த்தைகளால், எம்.ஜி.ஆரின் மனதைக் கரைத்தார். மீண்டும் கட்சியில் காட்சிக்கு வந்தார். ஏறத்தாழ ஓராண்டுக்குப் பின், மீண்டும் அவருக்கு கொள்கை பரப்புச் செயலாளர் பதவி கொடுக்கப்பட்டது. ஆனாலும் ஜெயாவை உள்ளாட்சித் தேர்தலில் பிரசாரம் செய்ய எம்.ஜி.ஆர். அனுமதிக்கவில்லை. அவரும் பிரசாரம் செய்யாததால், கட்சி மோசமான தோல்வியைச் சந்தித்தது.

அ.தி.மு.கவின் வேர்களே எம்.ஜி.ஆர். ரசிகர்கள் தானே...கட்சியை வலுப்படுத்த வேண்டுமென்றால், வேர்களை பலப்படுத்த வேண்டும் அல்லவா...? எம்.ஜி.ஆர். இதனை உணர்ந்தார். மதுரையில் மாபெரும் ரசிகர் மன்ற மாநாட்டை ஒருங்கிணைத்தார். அந்த மாநாட்டுக்கு எம்.ஜி.ஆர்., ஜானகி, ஜெயலலிதா மூவரும் ஒன்றாக பயணம் செய்கிறார்கள். அந்த மாநாட்டில் ஜெயலலிதாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. கட்சியின் மூத்த நிர்வாகிகள், ரசிகர் மன்ற ஆட்கள் இருக்கும்போது... தனக்கு ஆறடி செங்கோலை விழா மேடையில் ஜெயா பரிசாக அளிக்க, எம்.ஜி.ஆர். இசைவு தந்தார். இது எதையும் ஜானகி ரசிக்கவில்லை.



அந்த மேடையில் தன்னை 'எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற' தலைவராக நியமனம் செய்வார். அதற்கான அறிவிப்பை எல்லோர் முன்பும் அறிவிப்பார் என்று ஜெயலலிதா எதிர்பார்த்தார்.



ஆனால், அதை எம்.ஜி.ஆர். செய்யவில்லை. அது மட்டுமல்லாமல், மதுரையிலிருந்து திரும்ப வரும் போது, ஜெயலலிதாவை அவர் கண்டுகொள்ளவே இல்லை. ஆம், அவரை தனியாக விட்டு... ஜானகியுடன் சென்னை திரும்பினார் எம்.ஜி.ஆர்., இதை ஜெயலலிதா சற்றும் எதிர்பார்க்கவில்லை.... ரசிகர்கள் முன் இவ்வாறு நடந்தது, அவருக்கு மிகவும் அவமானமாகிவிட்டது. கட்சியின் மூத்த தலைவர்கள் நம்பினார்களோ இல்லையோ... ரசிகர்கள் அப்போதே நம்பிவிட்டார்கள் எம்.ஜி.ஆருக்குப் பின் ஜெயலலிதா தான் என்று... அவர்கள் முன் எம்.ஜி.ஆர். இப்படி தன்னை அவமானப்படுத்திவிட்டாரே என்று தவித்துப் போனார்.

அதற்கான காரணத்தையும் அவர் உணர்ந்தே இருந்தார்... எல்லாவற்றையும் மன்னித்தாலும் ஜானகி குறித்து தான் பேசியதை எம்.ஜி.ஆர். மன்னிக்கத் தயாராக இல்லை என்று... தனியாக சென்னை திரும்பிய ஜெ, எம்.ஜி.ஆருக்கு நீண்ட கடிதத்தை எழுதினார். அதில், "நான் உங்களை காயப்படுத்தி இருந்தால், என்னை மன்னித்து விடுங்கள்... இனி நான் எப்போதும் ஜானகி குறித்து பேசமாட்டேன்...என்னை மன்னித்து விடுங்கள்... மதுரையில் நடந்தது என்னை மிகவும் காயப்படுத்தியது... எனக்கென்று யார் இருக்கிறார்? நீங்களும் என்னை காயப்படுத்தினால், நான் எங்கு செல்வேன்..? என்னை மன்னித்து விடுங்கள்.." என்று எம்.ஜி.ஆரின் அன்புக்காக கெஞ்சியே இருந்தார்...!

(தொடரும்)


# பிரதமருக்கு எதிராக அவதூறு தேசிய பாதுகாப்புப் படையின் இணையத்தளம் முடக்கப்பட்டது

தேசிய பாதுகாப்புப் படையின் இணையத்தளத்தின் முகப்பு பக்கத்தில் பிரதமர் மோடிக்கு எதிராக அவதூறு வாக்கியங்கள் பதிவிடப்பட்டிருந்தன. இதனால் அந்த இணையத்தளம் முடக்கப்பட்டது.

தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு அதிரடி பணிகளுக்காக தேசிய பாதுகாப்பு கமாண்டோ படை (என்.எஸ்.ஜி.) உருவாக்கப்பட்டுள்ளது. கறுப்பு பூனைப் படை என அழைக்கப்படும் இந்த படையினருக்காக தனியாக இணையத்தளம் உருவாக்கப்பட்டு, அதை என். எஸ். ஜி. தலைமை அலுவலகம் பராமரித்து வரு கிறது.

இந்த இணையத்தளத்தில் நேற்று முன்தினம் காலையில் மர்ம கும்பல் ஒன்று ஊடுருவி அதை முடக்கும் பணிகளை மேற்கொண்டது. 'அலோண் இன்ஜெக்டர்' என தங்களுக்கு பெயர் சூட்டிக் கொண்ட அந்த கும்பல், இணையத்தளத்தின் முகப்பு பக்கத்தில் பிரதமர் மோடிக்கு எதிராக அவதூறு வாக்கியங்களையும் பதிவிட்டு இருந்தது.

இதை அறிந்த என். எஸ். ஜி. அதிகாரிகள் உடனே அந்த கும்பலின் முயற்சிகளை தடுத்து நிறுத்தினர். பாகிஸ்தான் ஆதரவு கும்பல் தான் இந்த அவதூறு செயலில் ஈடுபட்டு இருக்கலாம் என தெரிகிறது. இது குறித்து மேலும் விசாரணை நடந்து வருவதுடன், முடக்கப்பட்ட இணையத்தளத்தை மறுசீரமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(இ-7)




# ஆந்திராவில் அசைவ உணவு உண்ட 120 பேர் வைத்தியசாலையில் அனுமதி

ஆந்திரப் பிரதேசத்தில் அசைவ உணவு சாப்பிட்ட 120 பேர் உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுகுறித்து பொலிஸார், தெரிவிக்கையில்" விசாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள மாரிவிலாசா, பாதவிலாசா, சுர்ங்கவரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த 2,000 பேர், மாரிவிலாசா கிராமத்தைச் சேர்ந்த ராமநாயுடு என்பவர் ஏற்பாடு செய்த மதிய விருந்தில் கலந்து கொண்டு அசைவு உணவு உண்டுள்ளனர். இதில் 120 பேருக்கு வாந்தி, வயிற்று வலி மற்றும் மயக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சுகாதார மையத்தில் அனுமதிக்கப்பட்டனர்.

மருத்துவ சிகிச்சைக்கு பின் அனைவரும் நேற்று திங்கட்கிழமை காலை வீடு திரும்பினர்" என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறித் தாக்குதல்

(ஜம்மு)

காஷ்மீர் எல்லையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவ வீரர்கள் மீது பாகிஸ்தான் படையினர் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர்.

இந்திய இராணுவத்தினர் பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து 'சர்ஜிகல்' தாக்குதல் நடத்தியதை அடுத்து பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் காஷ்மீரிலுள்ள இந்திய நிலைகளை குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள ஷாபூர் எல்லைக் கட்டுப்பாடு கோடு பகுதியில் நேற்று முன்தினம் காலை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவ வீரர்கள் மீது பாகிஸ்தான் படையினர் துப்பாக்கியால் சுட்டு தாக்குதல் நடத்தினர்.

இதற்கு இராணுவ வீரர்களும் பாகிஸ்தான் படையினருக்கு தக்க பதிலடி கொடுத்தனர். இரு தரப்பினரிடையே நடந்த இந்த துப்பாக்கி சண்டையில் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.(இ-7)

# தீவிரவாதிகளின் ஊடுருவல்களைத் தடுக்க பங்களாதேஷ எல்லையில் லேசர் சுவர்கள்

பயங்கரவாதிகளின் ஊடுருவல்களைத் தடுக்க பங்களாதேஷ் எல்லையில் 'லேசர்' கதிர் சுவர்களும் 'ஸ்மார்ட் சென்சார்' கருவிகளும் அமை க்க அதிகாரிகள் பரிந்துரை த்துள்ளனர்.

இந்தியாவும் பங்களாதேஷமும் 4,096 கி.மீ எல்லையை பகிர்ந்து கொள்கின்றன. இதில் மேற்கு பங்காளத்தில் மட்டுமே 2,216.7 கி.மீ. வருகிறது. இதில் பெரும்பாலான பகுதியில் முறையான வேலிகள் அமைக்கப் படாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் பங்களாதேஷ தலைநகர் டாக்காவில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு பின் தீவிரவாதிகள் பங்களாதேஷத்தின் எல்லை வழியாக இந்தியாவுக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக உளவுத் துறை தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

இதனை தொடர்ந்து மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பாதுகாப்பற்ற எல்லை பகுதிகளில் உடனடியாக வேலிகள் அமைக்க வேண்டும் என எல்லை பாதுகாப்பு படையினர் மாநில அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள ஆற்றுப்படுகையையொட்டி உள்ள எல்லை பகுதிகளில் 'லேசர்' கதிர் சுவர்களும், ஆட்கள் இல்லாத எல்லை பகு திகளில் 'ஸ்மார்ட் சென்சார்' கருவிகளும் அமைக்க வேண்டும் என மாநில அரசுக்கு எல்லை பாதுகாப்பு படை அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கு ஒப்புதல் அளித்து உள்ள மாநில அரசு லேசர் சுவர்கள், ஸ்மார்ட் சென்சார் கருவிகள் அமைப்பதற்கான இடங்களை ஆர்ஜிதம் செய்து அவற்றை எல்லை பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக் கும்படி மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

அவசர அடிப்படையில் இந்த திட்டத்தை விரைந்து செயற்படுத்த மாநில அரசு முனைப்பு காட்டி வருகிறது. (இ-7)

# கறுப்புப் பணத்தில் குறைந்த வட்டியில் கடன் உதவியாம்



விவசாயிகள், சிறு தொழில்களுக்கு மீட்கப்பட்ட கறுப்பு பணத்தில் குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி தெரிவித்துள்ளார். மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது.

கறுப்பு பணம் ஒழிப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நல்ல பலனை தந்துள்ளது. ரூபாய் நோட்டு பிரச்சினை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இன்னும் சில நாட்களில் பழைய நிலைக்கு திரும்பி விடும்.

கறுப்புப்பணம் ஒழிப்பு சம்பந்தமாக பிரதமர் மக்களுக்கு அளித்த செய்தியில் இனி பொதுமக்களுக்கு இதன் மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் செய்யப்படும் என்று அறிவித்தார். அதன்படி கறுப்புப்பணம் ஒழிப்பின் மூலம் கிடைத்துள்ள பணத்தை வைத்து பல்வேறு நலத் திட்டங்களை செய்யவுள்ளோம்.

குறிப்பாக கடனுக்கான வட்டிகள் பெருமளவு குறைக்கப்படும். பெண்கள், விவசாயிகள் போன்றவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும். இத்துடன் சிறு மற்றும் குறு தொழில்கள், நடுத்தர தொழில்கள் ஆகியவற்றுக்கான கடன் வட்டிகளும் குறைக்கப்படும். வீட்டு கடன்களுக்கும் இனி குறைந்த வட்டியில் பணம் கிடைக்கும். இதன் மூலம் ஏராளமான மக்கள் பலன் பெறுவார்கள்.

கறுப்பு பணம் ஒழிப்பால் இப்போது அனைத்து வங்கிகளிலும் ஏராளமான பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மக்களுக்கு பலன் தரும் வகையில் மாற்றப்படும்.

கடந்த ஆண்டு நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு பொருளாதார மாற்று திட்டங்களை உருவாக்கினோம். அவை நல்ல பலனை அளித்து வருகிறது. சரக்கு, சேவை வரி இந்த ஆண்டு அமுலுக்கு வரும். பண வீக்கத்தை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை காரணமாக அது கட்டுக்குள் உள்ளது. இதில் மேலும் முன்னேற்றம் ஏற்படும்.

சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே மக்கள் மீது ஏராளமான மறைமுக வரிகள் விதிக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் எடுத்த மாற்று நடவடிக்கை காரணமாக இதுபோன்ற வரிகள் நீக்கப்படவுள்ளது.

அரசின் நடவடிக்கைளுக்கு பொதுமக்கள் மிகுந்த ஒத்துழைப்பு கொடுத்திருப்பதால் இந்த மாற்றங்களை சிறப்பாக செய்து முடித்துள்ளோம். அரசுக்கு வரவேண்டிய வரி வருவாயும் தற்போதைய நடவடிக்கைகளால் அதிகரித்துள்ளது. இதன் மூலம் இன்னும் சிறந்த திட்டங்களை செயற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துருக்கியில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் இரு இந்தியர்கள் பலி!- சுஷ்மா தகவல்



(டில்லி)

துருக்கி இரவு விடுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் இரண்டு பேர் இந்தியர்கள் என மத்திய அமைச்சர் சுஷ்மா தகவல் வெளியிட்டுள்ளார்.

துருக்கி தலைநகரான இஸ்தான்புல் நகரையொட்டி, ஐரோப்பிய கண்டத்தையும், ஆசிய கண்டத்தையும் பிரிக்கும் பாஸ்பரஸ் ஜலசந்தி பகுதியில் ஆர்ட்டாக்கோய் மாவட்டத்தில் உள்ள ஒரு இரவு விடுதி, உள்நாட்டினரும், வெளிநாட்டினரும் அடிக்கடி ஒன்றுகூடி விருந்து நிகழ்ச்சிகளை நடத்தும் பிரசித்தி பெற்ற இடமாகும்.

புத்தாண்டை வரவேற்க இந்த இரவு விடுதியில் சுமார் 500 பேர் திரண்டு, மகிழ்ச்சியுடன் காத்திருந்தனர். நள்ளிரவு 12 மணிக்கு மேல் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்துடன் உச்சகட்ட உற்சாகத்தில் அவர்கள் திளைத்திருந்தபோது, இரவு சுமார் 1.30 மணியளவில் தானியங்கி ரக துப்பாக்கியுடன் உள்ளே புகுந்த ஒருவன், எதிர்ப்பட்டவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டான்.

இதில் 35 பேர் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்தனர். 40 இற்கும் அதிகமானவர்கள் குண்டு காயங்களுடன் அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி மேலும் 4 பேர் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் பலியானவர்களில் இரண்டு பேர் இந்தியர்கள் என தெரியவந்துள்ளது. அவர்களில் ஒருவர் குஜராத்தை சேர்ந்த முன்னாள் எம்.பியின் மகன் அபிஸ் ரிஸ்வி என்றும், மற்றொருவர் குஷி ஷா என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (இ-3)

# கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி

**ஆசிரியர் குறிப்பு**


கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக் கடதாசியில் நேற்றைய முதலாவது தொடரில் வடமாகாணத்தில் மட்டுமே கடமை நிறைவேற்று அதிபர்களின் பதவி முடிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், ஏனைய 8 மாகாணங்களில் கடமை நிறைவேற்று அதிபர்கள் எந்தவித பிரச்சினையும் இன்றி தொடர்ந்தும் கடமையாற்றி வருகின்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

கடமை நிறைவேற்று அதிபர்களால் கூறப்பட்ட மேற்படி விடயத்தின் உண்மைத் தன்மை தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அவர்கள் தனது கருத்தைப் பகிரங்கமாகக் கூற வேண்டும்.

ஏனெனில் வடமாகாணத்தில் உள்ள கடமை நிறைவேற்று அதிபர்களை அந்தப் பதவி நிலையில் இருந்து தூக்க வேண்டும் என்பதில் கடுமையாக நின்றவர் ஜோசப் ஸ்ராலின் என்பதுடன் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்து கடமை நிறைவேற்று அதிபர்களின் பணி முடிவுறுத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தவர்.

எனவே இந்த அடிப்படையில் வேறு எந்த மாகாணமும் நினைக்காத- செய்யாத முரண்பட்ட ஒரு வேலையை வடக்கு மாகாணம் செய்வதற்கு காரணமாக இருந்தவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் என்பது மறுதலிப்புக்குரியதன்று.

இவ்வாறு வடமாகாணத்துக் கடமை நிறைவேற்று அதிபர்களின் பணியை முடிவுறுத்த வேண்டும் என்று அவர் திடமாக நின்றதற்கான காரணம் என்ன? ஏனைய மாகாணங்களில் கடமை நிறைவேற்று அதிபர்களின் பணி முடிவுறுத்தப்பட்டதான சம்பவங்கள் இடம்பெற்றதுண்டா? அவ்வாறு இல்லையாயின் அந்த மாகாணங்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை என்ற விபரங்கள் தொடர்பில் ஜோசப் ஸ்ராலின் அறிக்கை விடுவது பொருத்தமானது என்று கருதப்படுகிறது.




மேலும் கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தின் மரியாதைக்குரிய நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அவர்களிடம் கையளிக்கப்படும் என வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளது என்ற தகவலையும் இவ்விடத்தில் குறிப்பிடுகின்றோம்.

(ஆசிரியர்)

**சத்தியக்கடதாசி**

கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் இரண்டு வகைமையில் அதிபர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர்.

அதில் ஒன்று விசேட சுற்றுநிருபம் மூலம் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தி அதிபர் சேவைக்குள் உள்ளீர்த்தல்.

இரண்டாவது; அதிபர் தரப் பரீட்சையில் தோற்றிய கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு விசேடமாக இருபது அல்லது முப்பது புள்ளிகள் வழங்கப்பட்டு அவர்கள் அதிபர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டனர்.

பொதுவில் பதவியுயர்வுகள் என்பன பரீட்சை மற்றும் சேவை மூப்பு என்ற இரு சமாந்தரப் படிநிலைகளில் வழங்கப்படுவதே வழமை.

எனினும் சேவை மூப்பு என்ற விடயம் கடமை நிறைவேற்று அதிபர்கள் விடயத்தில் செல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒரு சில ஆசிரியர் தொழிற்சங்கங்கள் காரணமாக இருந்தன என்பதே உண்மை.

இலங்கையில் இருக்கக்கூடிய ஆசிரியர் தொழிற்சங்கங்களில் பெரும்பாலானவை கற்பித்தலைச் செய்வதில் பஞ்சிப்பட்டவர்கள். சும்மா இருந்து சோலி செய்வதற்கான அமைப்பாக இருப்பதுதான் மிகப் பெரும் வேதனைக்குரியது.

ஆசிரியர்களின் உரிமைகள் தொடர்பில் எந்த விதமான கரிசனையும் கவனமும் இல்லாமல் தொழிற்சங்கங்கள் இயங்குமாயின் இதைவிட்ட நிட்டூரம் வேறு எதுவுமாக இருக்கமுடியாது.

தவிர, அரசியல் சார்ந்து இனத்துவ பேதங்களைத் தூண்டி விடுவதிலும்; சுமுகமான சூழ்நிலைகளைக் குழப்புவதிலும் கூலியாட்களாக தொழிற்சங்கவாதிகள் ஒரு சிலர் பேரினவாதத்துடன் சேர்ந்து செயற்படுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இது தொடர்பில் தமிழ் மக்கள் விழிப்பாக இருப்பது அவசியம்.

குறிப்பாக இத்தகைய தொழிற்சங்கங்கள் சார்ந்த உறுப்பினர்கள், அப்பாவித்தனமாக- ஆராய்வு இல்லாமல் செயற்படுவதைத் தவிர்த்து ஏன்? எதற்கு? எப்படி? எனக் கேள்விகளை எழுப்பி உண்மையைக் கண்டறிய வேண்டும்.

இல்லையேல் தொழிற்சங்கவாதிகள் என்ற போர்வையுடன் நுழைபவர்கள் தங்கள் இலக்கைச் சாதித்து யாருக்கு வாக்குக் கொடுத்தார்களோ அந்த வாக்கைக் கனகச்சிதமாக நிறைவேற்றி விடுவர்.

**பாதகமான பிரமாணக்குறிப்பு**

2014 .ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அதிபர் சேவை பிரமாணக்குறிப்பு சேவை மூப்பிலுள்ள ஆசிரியர்களுக்குப் பாதகமானது என்பது வெளிப்படை.

அதிபர் சேவை புதிய பிரமாணக்குறிப்பின் பிரகாரம் அதிபர் சேவை தரம் III இற்கு மட்டுமே போட்டிப் பரீட்சை நடத்தப்படும் என்பது நியதி. புதிய அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு வெளிவரு வதற்கு முன் னர் அதிபர் சேவை தரம் II, தரம் III என்ற வகுதிகளுக்கு பரீட்சைகள் நடைபெற்றன.

இவ்வாறு அதிபர் சேவை தரம் II, தரம் III என்ற பரீட்சை களில் சேவை மூப்பின் அடிப்படை யில் ஆசிரியர்கள் தோற்றமுடியும்.

இதன் மூலம் சேவைக் காலம் குறைந்த ஆசிரி யர்களுடன் அதே சேவைக்காலத்தை யுடைய ஆசிரியர்களே பரீட்சைக்குத் தோற்றுவர்.

மாறாக சேவை மூப்புக் கொண்ட ஆசிரியர்களுடன் அந்தத் தரத்தில் உள்ள ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சையில் பங்கேற்பர்.


ஆனால் புதிய அதிபர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அதிபர் சேவையில் தரம் III இற்கு மட்டுமே போட்டிப் பரீட்சை நடைபெறும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சேவை மூப்புக் கொண்ட ஆசிரியர்கள், சேவைக் காலம் குறைந்த- .வயது குறைந்த ஆசிரியர்களுடன் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இந்நிலைமை சேவை மூப்புடைய ஆசிரியர்களுக்குப் பாதகமாக இருந்த போதிலும் இதனை ஆசிரியர் தொழிற்சங்கம் எவையும் சுட்டிக்காட்டவில்லை. இதன் விளைவுதான் இன்றைய குழப்பங்கள்.

(நாளை தொடரும் )

புரந்தரன்

# நல்லாட்சி அரசு குறித்து பிரதமர் விசேட உரை



நல்லாட்சி அரசாங்கம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட உரை யாற்றவுள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கம் தொடர்பில் பிரதமர் விசேட உரை யொன்றை ஆற்றவுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலம் தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் உரையாற்றப்படவுள்ளது. (இ-7)


## கல்வியியற் சொற்பொழிவும் கலந்துரையாடலும் வாழ்க்கைக்கான கல்வியும் இலத்திரனியல் ஊடான கற்கையும்

சொற்பொழிவாளர்:-கல்வியியல் ஆய்வாளர் வழிகாட்டி பேராசிரியர் கலாநிதி Bridge Somekh (Metroplitam University-UK)

காலம்:- 04.01.2017 மாலை 3.00 மணி

இடம்:- நோத்லங்கா IIT சர்வதேச பல்கலைக்கழகம், ஸ்டான்லி வீதி, மக்கள் வங்கி மூன்றாம் மாடி மண்டபம்.

கல்வியியல் ஆய்வுத்துறையில் ஈடுபட்டுள்ளோர், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் அனைவரும் கலந்து பயனடையலாம். இலவசமாக நடைபெறும் இந்நிகழ்வில் தமிழ்மொழி பெயர்ப்பும் உண்டு.


ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

"ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவகம்"
யாழ்ப்பாணம்.
கலாநிதி பா.தனபாலன்
077 068 1958

(7356)


# முத்தமிழ் ச.ச.நிலையம் விசமிகளால் தீக்கிரை

## 300 இற்கும் மேற்பட்ட புத்தகங்கள் நாசம்






(படங்கள்:-மகாலிங்கம்)

(கரணவாய்)

யாழ். உடுத்துறை வடக்கு வேம்படி முத்தமிழ் சனசமூக நிலையம் திட்டமிட்டு இனம் தெரியாத கும்பலினால் எரிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் கல்வி கற்கும் வினாத்தாள்களும் 300 இற்கு மேற்பட்ட புத்தகங்களும் 150 பிளாஸ்ரிக் கதிரைகள், அலுமாரிகள் இரண்டும் மேசைகள் ,விளையாட்டு உபகரணப் பொருட்களும் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளன. உடனடியாகப் பளைப் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் புலன் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். பத்து இலட்சத்துக்கும் மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (இ-60)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 946


விது





ராஜ்




ரதி




அனு




ராகுலன்




சிந்து





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாம் நல்லதைச் செய்ய முயன்றால் 2017ம் ஆண்டு நன்றாக இருக்கும்

## போப் பிரான்சிஸ் ஆசியுரையில் அறிவுரை

(வத்திக்கான்)

**கடவுளின் கருணையால் நாம் ஒவ்வொருவரும் நல்லதைச் செய்ய முயன்றால் 2017 ஆம் ஆண்டு நன்றாக இருக்கும் என போப்பாண்டவர் பிரான்சிஸ் ஆசியுரையுடன் அறிவுரை வழங்கியுள்ளார். வெறுப்புணர்வையும் வன்முறையையும் ஒதுக்கித் தள்ளுங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.**



புத்தாண்டு பிறப்பையொட்டி, போப் ஆண்டவர் பிரான்சிஸின் உரையை கேட்பதற்காகவும் ஆசியை பெறுவதற்காகவும் நேற்று முன்தினம் வாடிகன் நகரில் உள்ள செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடினர். அவர்களிடையே போப்பாண்டவர் பேசினார்.


அப்போது அவர், "கடவுளின் கருணையால் நாம் ஒவ்வொருவரும் நல்லதைச் செய்ய முயன்றால், 2017 ஆம் ஆண்டு நன்றாக இருக்கும். வெறுப்புணர்வையும், வன்முறையையும் ஒதுக்கித் தள்ளுங்கள். சகோதரத்துவத்தையும் இணக்கத்தையும் ஆதரியுங்கள்.

துரதிர்ஷ்டவசமாக, இந்த நாளில் கூட துருக்கி நாட்டில் வன்முறைச் சம்பவம் நடந்துள்ளது. துருக்கி மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், காயம் அடைந்தவர்கள் விரைவில் குணம் அடைய பிரார்த்திக்கிறேன்.

இந்த நேரத்தில், உலகத்தையே அச்சத்தின் பிடியில் வைத்திருக்கும் தீவிரவாதத்துக்கு எதிராக போராடி வருபவர்களுக்காக நான் பிரார்த்திக்கிறேன்" என்றார். (இ-3)

# பனிப்பாறையின் மீது மோதி டைட்டானிக் மூழ்கவில்லை

## வெளியான புதிய தகவல்



மனித வரலாற்றில் மிக மோசமான சம்பவமாக கருதப்படும் டைட்டானிக் கப்பல் விபத்திற்கு கடலில் இருந்த பனிப்பாறை முக்கிய காரணம் இல்லை என தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்து நாட்டில் உள்ள Southampton துறை முகத்தில் இருந்து பிரமாண்ட மான சொகுசு கப்பல் கடந்த 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகருக்கு புறப்பட்டது.

ஆனால், நடுக்கடலில் ஏற்பட்ட பயங்கர விபத்தால் கப்பல் கடலில் மூழ்கியதுடன் அதில் பயணம் செய்த 1,500 இற்கும் மேலானவர்கள் பலியாகினர்.

உலகை உலுக்கிய இவ்விபத்திற்கு 'நடுக்கடலில் இருந்த பனிப்பாறை மீது கப்பல் மோதியது காரணம்' என இன்றளவும் கூறப்படுகிறது.

ஆனால், தற்போது இந்த கருத்தை முறியடிக்கும் விதத்தில் புதிய அதிர்ச்சித் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

பிரபல புகைப்படக்கலைஞரும், ஊடகவியலாளருமான Senan Molony என்பவர் டைட்டானிக் விபத்து தொடர்பாக கடந்த 30 ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வந்துள்ளார்.

டைட்டானிக் கப்பல் இங்கிலாந்து நாட்டில் இருந்து புறப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் நடுக்கடலில் விபத்து ஏற்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களை பல ஆண்டுகளாக பல்வேறு வகைகளில் ஆய்வு செய்து வந்துள்ளார்.

இந்த ஆய்வின் முடிவில், 'கப்பலின் மையப்பகுதிக்குள் தீவிபத்து ஏற்பட்டது தான் டைட்டானிக் கப்பல் மூழ்குவதற்கு மிக முக்கிய காரணம்' என தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விரிவாக வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இங்கிலாந்து நாட்டில் இருந்து புறப்பட்ட உடனே, கப்பலின் மூன்றாம் தளத்திற்குள் உள்ள பகுதியில் மிகப் பெரிய தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து நிகழ்ந்து கப்பல் மூழ்கியபோது, பனிப்பாறை மோதிய பகுதிக்கு அருகில் சுமார் 30 அடி நீளத்திற்கு கறுப்பு அடையாளங்கள் உள்ளது புகைப்படங்களில் பதிவாகியுள்ளது.

இங்கிலாந்து நாட்டில் இருந்து கப்பல் புறப்பட்ட போது இந்தக் கறுப்பு அடையாளங்கள் இல்லை. இது மட்டுமில்லாமல், இது விபத்து நேர்ந்தபோது ஏற்பட்ட தீவிபத்து அல்ல.

இதற்கு முன்னதாக, அதாவது 3 வாரங்களுக்கு முன்னதாகவே அந்த தீவிபத்து ஏற்பட்டு உட்புறமாகவே தீ எரிந்து வந்துள்ளது.

இந்த சூழலில் தான் கப்பல் பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டுள்ளது.

மேலும், பிரமாண்டமான டைட்டானிக் கப்பல் பனிப்பாறை மீது மோதிய பிறகும் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால், கப்பலின் மையப்புகுதியில் ஏற்பட்ட தீவிபத்தானது சுமார் 1,000 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பம் பரவியது. இந்த வெப்பம் கப்பலின் வலிமையை சுமார் 75 சதவிகிதம் குறைத்து மிகவும் பலவீனமாக்கியது.

இந்த சூழலில் தான் கப்பல் பனிப்பாறை மீது மோதியதும் அது இரண்டாக உடைந்து கடலில் மூழ்கியுள்ளது என Senan Molony தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளரின் இக்கருத்து சரியானதாக உள்ளதால் டைட்டானிக் கப்பல் விபத்து தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வரும் வல்லுநர்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும், கடந்த 2008 ஆம் ஆண்டு Ray Boston என்ற ஊடகவியலாளர் நடத்திய ஆய்வில், 'இங்கிலாந்து நாட்டில் இருந்து டைட்டானிக் கப்பல் புறப்படுவதற்கு 20 நாட்களுக்கு முன்னதாகவே கப்பலின் மையப்பகுதியில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

நடுக்கடலில் பனிப்பாறை மீது கப்பல் மோதாமல் இருந்தால் கூட நியூயோர்க் நகரை அடைவதற்கு முன்னதாகவே தீவிபத்தால் கப்பல் வெடித்து சிதறியிருக்க வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொலையில் முடிந்த கொண்டாட்டம் புத்தாண்டு விழாவில் 11 பேர் பலி!

பிரேசில் நாட்டில் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது முன்னாள் மனைவி உட்பட 11 பேரை சுட்டுக் கொன்றவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு உயிரிழந்தார்.

பிரேசில் நாட்டில் உள்ள சாவ் பாலோ மாநிலத்தின் காம்பினாஸ் நகரில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் மது விருந்துடன் புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது.

அப்போது, அந்த வீட்டின் மதில்சுவரை தாண்டி உள்ளே குதித்த சிட்னி ராமிஸ் டி அராஜோ(வயது-49) என்பவன் வீட்டின் கதவை திறந்து கொண்டு கையில் துப்பாக்கியுடன் உள்ளே புகுந்தான்.

அங்கு உற்சாகமாக ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த முன்னாள் மனைவி மற்றும் தங்களது 8 வயது மகனை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றான்.

புத்தாண்டு விருந்தில் பங்கேற்ற மேலும் 8 பேரை சுட்டுக் கொன்ற அந்நபர் இறுதியாக தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுகொண்டு உயிரிழந்தான். (இ-3)

## இந்தியா - பாகிஸ்தான் அணுமின் நிலையங்கள் பட்டியல் பரிமாற்றம்

இந்தியா, பாகிஸ்தானில் செயற்படும் அணுமின் நிலையங்களின் பட்டியலை இரு நாடுகளும் நேற்று முன்தினம் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டன.

அணுமின் நிலையங்கள் தொடர்பாக கடந்த 1988 டிசெம்பர் 31இல் இந்தியா, பாகிஸ்தான் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி ஒருவரது அணு மின் நிலையங்களை மற்றவர் தாக்கக் கூடாது. இது 1991 ஜனவரி 27இல் நடைமுறைக்கு வந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி அணுமின் நிலையங்கள் தொடர்பான விபரங்களை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் திகதி இரு நாடுகளும் பரஸ்பரம் பரிமாற்றம் செய்து கொள்கின்றன.

முதல்தடவையாக 1992 ஜனவரி முதலாம் திகதி பட்டியல் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இப்போது 26 ஆவது முறையாக டில்லி, இஸ்லாமாபாத்தில் உள்ள தூதரகங்கள் வாயிலாக இரு நாடுகளும் ஒரேநேரத்தில் நேற்று தகவல்களைப் பரிமாறிக்கொண்டன.

இதேபோல இரு நாட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இந்திய, பாகிஸ்தான் சிறைக் கைதிகள் தொடர்பான விபரங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கடந்த 2008 மே 21இல் கையெழுத்தான ஒப்பந்தப்படி சிறையிலுள்ள அடுத்த நாட்டு கைதிகள் அவரது தூதரகத்தைத் தொடர்பு கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய இரு திகதிகளில் கைதிகள் பட்டியல் பரஸ்பரம் அளிக்கப்படுகிறது. (இ-7)

## கிர்கிஸ்தான் இராணுவத் தளபதியாக இந்திய வம்சாவளி தொழிலதிபர்

(டுபாய்)



கிர்கிஸ்தான் நாட்டு இராணுவத்தின் மேஜர் ஜெனரலாக இந்திய வம்சாவளி தொழிலதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் கேரள மாநிலம் கோழிக்கோட்டையைச் சேர்ந்தவர் ஷேக் ரபிக் முகமது. ஆரம்பக் கல்வி மட்டுமே முடித்த இவர் இளம் வயதிலேயே மும்பை சென்று வேலை செய்து பல்வேறு தொழில் நுணுக்கங்களை கற்றுள்ளார்.

பின்னர் அங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார். சவுதி, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளில் தொழில் செய்தார். அவரது குடும்பம் டுபாயில் வசிக்கிறது.

இந்நிலையில், கிர்கிஸ்தான் நாட்டு இராணுவ மேஜர் ஜெனரலாக ஷேயிக் ரபீக் முகமது நியமிக்கப்பட்டுள்ளார். அவரை பாதுகாப்புத் துறை அமைச்சர் அலி மிர்சா நியமித்திருப்பதாக கலீஜ் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்பு கிர்கிஸ்தான் நாட்டில் பணியாற்றியதை கருத்தில் கொண்டு அவரை இராணுவ மேஜர் ஜெனரல் பொறுப்பை ஏற்கும்படி அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து கலீஜ் டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில், "ஈரான் நாட்டிற்காக மிகப் பெரிய எஃகு ஆலையை ரபீக் அமைத்துக்கொண்டிருந்த போது கிர்கிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி குர்மன்பெக்கை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அதன்பின்னர் அவர் மூலம் கிர்கிஸ்தான் நாட்டிற்கும் அதேபோன்ற ஆலையை அமைத்துக்கொடுத்தார். அத்துடன் கிர்கிஸ்தான் குடியுரிமை பெற்றார். ஜனாதிபதி தேர்தலில் குர்மன்பெக் வெற்றி பெற்றதும் ரபீக்கை தனது தலைமை ஆலோசகராக நியமித்தார்.

அவரது வாழ்க்கையில் இது ஒரு மைல்கல்லாகும். 5 ஆம் வகுப்பு படித்து முடிக்கும் முன்பே கேரளாவில் இருந்து குடிபெயர்ந்த ரபீக், சமீபத்தில் கிர்கிஸ்தான் இராணுவ மேஜர் ஜெனரலாக நியமிக்கப்பட்டதன் மூலம் உயர் பதவியை அடைந்துள்ளார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள் இராணுவ பதவிக்கு வருவது மிகவும் அரிது என ரபீக்கின் ஊடக ஆலோசகர் தெரிவித்துள்ளார். (இ-3)

தானும் உதவ மாட்டான். பிறரையும் உதவ விடமாட்டான். அவன்தான் ஒன்றுக்கும் உதவாதவன்.
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பொருத்து வீடே பொருத்தம் ஒரு தொலைபேசி உரையாடல்

தமிழ் மக்களின் நலன் தொடர்பில் அக்கறை கொண்ட ஓர் அன்பர் நேற்றைய தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

ஐயா! எங்கள் தமிழ் மக்களுக்குக்கிடைக்கக் கூடிய பொருத்து வீடுகளை ஏன்தான் தடைசெய்கிறீர்கள்? அந்த மக்கள் பொருத்து வீட்டில் வசதியாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அதிக செலவில் பொருத்து வீடு அமைக்கப்படுகிறது என்றெல்லாம் கவலை வெளியிடுகிறார்கள். ஆனால் எங்கள் தமிழ் மக்கள் – தமிழ் குழந்தைகள் ஆன வீடின்றி உறங்க நல்ல இடமின்றித் தவிப்பது இவர்களுக்குத் தெரியாதா? என்று கேள்வி எழுப்பினார்.

அன்பரே! பொருத்து வீடு எங்களுக்குப் பொருத்தமில்லை எனவே அதற்கு விண்ணப்பிக்க வேண்டாம் என்று கூறியவர் மாவை சேனாதிராசா எனவே வலம்புரியில் வெளிவந்தது மாவை சேனாதிராசா எம்பியின் கருத்தே அன்றி அது வலம்புரியின் கருத்தல்ல.

வலம்புரியின் நிலைப்பாடு பொருத்து வீடு தேவையா? இல்லையா? என்பதைப் பயனாளிகளே தீர்மானிக்க வேண்டும் என்பதுதான்.

பொருத்து வீடுகளாவது நமக்கு கிடைக்கட்டும் என்று பயனாளிகள் விரும்பினால் பொருத்து வீடுகள் கிடைக்கட்டும் என்று வலம்புரி வலியுறுத்தும்.

அதே நேரம் பொருத்து வீடுகள் நமக்கு தேவையில்லை கல்வீட்டுத்திட்டம் தான் தேவை என்று பயனாளிகள் கருதினால் அதற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என வலம்புரி வாதிடும். இதுவே வலம்புரியின் நிலைப்பாடு என்று மூச்சு விடாமல் சொல்லி முடிப்பதற்குள்,

இப்போது யாழ்ப்பாணத்தில் மண் எடுக்க முடியுமா? கல் எடுக்க முடியுமா? மேசன் – கூலி இவையெல்லாம் தாராளமாக கிடைக்குமா? கல்வீட்டுத் திட்டத்தை எங்கள் மக்களுக்கு கொடுத்து விட்டு, வீட்டைக் கட்டிமுடியுங்கள் காசு தருகிறோம் என்று கூற, மக்கள் தங்களிடம் இருக்கக்கூடிய அற்ப சொற்ப நகைகளையும் அடகு வைத்து – விற்று வீட்டை கட்டி முடித்து காசைப் பெறுவதற்கு பிரதேச செயலகத்திற்கு அலைந்து திரிவதிலேயே போதும் என்றாகிவிடும்.

ஆனால் பொருத்து வீட்டை அவர்களே கட்டி தருவார்கள். இன்றைய சூழ்நிலையில் இது நல்லதுதானே! கட்டப்படும் வீட்டின் எதிர்காலம் பற்றி கவலைப்படுவோர் வீடில்லாமல் அலையும் எங்கள் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை கொள்ளாதது ஏன் என்று கேட்டார்.

அவரின் கேள்வியில் நியாயம் உண்டு என்பது மறுதலிக்கக்கூடியதல்ல என நினைப்பதற்குள்,

ஏன்! தான் இப்படி எல்லாம் எங்கள் தமிழர் தாயகத்தில் நடக்கிறது எதையும் சிந்தித்துச் செய்ய மாட்டோமா?

யுத்தத்தால் பாதிப்புற்ற மக்கள் இருப்பதற்கு வீடில்லாமல் எவ்வளவோ கஸ்ரங்களை அனுபவிக்கின்றனர். ஆனால் நாங்களோ கிடைக்கின்ற பொருத்து வீடுகளை மக்களுக்கு கிடைக்காமல் தடுக்கின்றோம். இது எந்தவகையில் நியாயமானது. முஸ்லிம் அரசியல் தலைமைகள் தங்கள் மக்களுக்கு பொருத்து வீடுகள் கிடைப்பதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டனர். ஆனால் நாங்கள் என்ன செய்கிறோம். மண்மீட்பு போராட்டம் நடத்திய ஒரு இனம் இன்று பொருத்து வீடா? கல்வீடா? என்று வாதம் நடத்துகிறது. இதற்கு காரணம் பொழுதுபோக்கு அரசியல் நடத்தும் எங்கள் அரசியல் தலைமை என்பது மறுக்க முடியாத உண்மை. உரிமைகளைக் கேட்டோம்; அதே நேரம் அரசிடம் கிடைக்கக்கூடிய அத்தனை உதவிகளையும் எங்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம். இப்படி அந்த தொலைபேசியில் அவர் கூறியபோது, பரமேஸ்வரா! பொருத்து வீட்டை எதிர்ப்பது தவறு போலும் என்று எண்ணத் தோன்றியது.

அட! பரமேஸ்வரனுக்கே பிரணவம் புகட்டிய அந்த சுவாமிநாதன், பொருத்து வீட்டை விடவா போகிறார். உண்மை நடக்கட்டும்; நன்மை என்றால் அதை வரவேற்போம் என்றேன்.

# நாட்டில் வறுமையை ஒழிக்க அதிகாரிகள் முன்வரவேண்டும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிப்படைத் தன்மையுடன் பொதுமக்களுக்கு சேவையாற்றி நாட்டில் வறுமையை ஒழிக்க அரச அதிகாரிகள் முன்வர வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அழைப்பு விடுத்துள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்க சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றைய தினம் காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி செயலகம் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் கடந்த வருடம் உணவு உற்பத்தி, போதை ஒழிப்பு, போசாக்கின்மையை நீக்குதல், டெங்கு மற்றும் சிறுநீர் நோய்களை கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன.

அதனை தொடர்ந்து இந்த வருடத்தை வறுமை ஒழிக்கும் ஆண்டாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகளாகிய நாம் ஒவ்வொருவரும் மக்களின் தேவைகளை நேர்மையுடன், அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். மக்களுடைய தேவைகளை தாமதப்படுத்தாது உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

வறுமை கோட்டுக் குட்பட்ட மக்களை இலக்கு வைத்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு திட்டங்களை அமுல்படுத்த முன்வர வேண்டும்

எந்தவொரு வேலையை செய்யும் போதும் அதில் விருப்பமும் கடின உழைப்பும் இருந்தால் மட்டுமே அதை நிறைவாக செய்யலாம்.

அத்துடன் வெளிப்படைத் தன்மை வேண்டும். எந்த செயற்பாடுகளிலும் 100 வீதம வெளிப்படை தன்மையுடன் செயற்பட்டால் எந்தப் பிரச்சினையும் ஏற்பட வாய்ப்பில்லை.

மற்றவர்களுக்கு ,உதவி செய்ய வேண்டும். கடமைகளுக்கு உட்பட்ட சேவைகளை மட்டும் செய்யாமல் எம்மை தேடி வரும் மக்களுக்கு எந்தவிதமான உதவியையும் செய்ய முன்வர வேண்டும்.

வறுமைப்பட்டவர்களுக்கு முடியாது எனகூறாமல் அனைத்து சேவைகளையும் செய்ய வேண்டும். நாம் செய்யும் உதவிதான் எமக்கு வேறு வழியில் நன்மையாக கிடைக்கும. கெட்டசிந்தனை எம்மை தான் பாதிக்கும்.

எம்மை நாடி வரும் மக்களுக்கு உதவ வேண்டும். அநீதி நடக்கும் போது நீதி பெற்றுக்கொடுக்க உதவி செய்ய வேண்டும்.

நாம் நீதியின் பாதையில் எமது கடமைகளை செய்தால் யாருக்கும் அடிபணியத் தேவையில்லை. திட்டங்களுக் கான தெரிவுகள் இடம் பெறும் போது வறுமையை அடிப்படையாக கொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நாட்டு மக்களுக்கான கடமைகளை நிறைவேற்றும் முக்கிய பொறுப்பு அரச ஊழியர்களுக்கு உள்ளது

## ஜனாதிபதியின் செயலாளர் அபேகோன் தெரிவிப்பு

அரசியல் அதிகார மட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களினூடாக மக் களுக்கான கடமைகளை நிறைவேற்றும் முக்கிய பொறுப்பு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன் தெரிவித்தார்.

பிறந்திருக்கும் புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் முதலாவது நாளை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஜனாதிபதி அலுவலக பணிக்குழாத்தினருடனான சந்திப்பின்போதே ஜனாதிபதியின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு பாரிய யுகப் புரட்சியைத் தொடர்ந்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களினூடாக நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு முன்னெடுத்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரச அதிகாரிகளுக்கும் நன்றி.

நாட்டின் அரச தலைவருக்கு நெருக்கமாகவுள்ள ஊழியர் பிரிவான ஜனாதிபதி அலுவலக பணிக்குழாம் தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற போது ஜனாதிபதியினதும் நாட்டினதும் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும். ஒரு நபரின் மூலம் ஏற்படும் தவறு சில நேரங்களில் முழு அரச பொறிமுறைக்கும் விரும்பத்தகாத பாதிப்புகளை ஏற்படுத்திவிட முடியும் என மேலும் தெரிவித்தார்.

இதன்போது பிறந்திருக்கும் 'புத்தாண்டை முன்னிட்டு அரச கொள்கைகள், நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் வழங்கப்படும் பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அனைவருக்கும் நன்மைகள் கிடைக்கத்தக்க துரித அபிவிருத்தியின் மூலம் 2017 ஆம் ஆண்டு வறுமையை ஒழித்துக் கட்டுவதற்கும், இலங்கை மக்களுக்குப் பாதுகாப்பான ஒரு எதிரகாலத்தைக் கட்டியெழுபபுவதற்கும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும் பிறந்திருக்கும் புத்தாண்டில் அனைவருக்கும் பலமும் தைரியமும் கிடைக்க வேண்டுமென செயலாளர் வாழ்த்தினார். (இ-7)

# வரட்சிக்கு முகங்கொடுக்க திட்டம் தயார்

(கொழும்பு)

இவ்வாண்டில், இலங்கை எதிர்கொள்ளவுள்ள வரட்சிக்கு முகங்கொடுக்கும் வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான் விஜேகோன், நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவாமலிருக்கும் வகையில், அத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றார்.

இரண்டரை மாதங்களில் அறுவடையை பெற்றுக் கொள்ளக்கூடிய பீ.ஜீ. 250 ரக நெல்லைப் பயிரிட்டு, விவசாயிகளிடமிருந்து ஆயிரம் புசல் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக, அவ்வகை நெல்லினங்களை, அடுத்த சிறுபோகத்தில் பயிரிடுவதற்காக விநியோகித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைக்கு கிடைக்கப்பெறும் மழையைக் கொண்டு மேலும் 4 இலட்சம் ஹெக்டெயரில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அவர், அதன் மூலம், எதிர்வரும் ஜீலை மாதம் வரையில், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

நெற்பயிர்ச் செய்கை மாத்திரமல்ல, மரக்கறி மற்றும் பழப் பயிர்ச்செய்கையும், வரடசியால் பாதிக்காத வகையில, விவசாய அமைச்சுடன் இணைந்து, திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக, பணிப்பாளர் நாயகம், மேலும் தெரிவித்தார். (இ-3)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணி வரை மணி வரை யாழ். பிரதேசத்தில புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஓமந்தை வீட்டுத்திட்டம், ICT கல்லூரி, Union Alliance Ltd ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத்திட்டம், கொன்னயன் குடியிருப்பு, கடலோரி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இந்தியாவின் எழுச்சி என்ற சக்கரம் மீண்டும் ஒருமுறை சுழல ஆரம்பித்துவிட்டது. மீண்டும் இந்தியாவிலிருந்து குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இந்தக் குரல் விரைவில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கேட்டே ஆக வேண்டும்.

❖ நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள். இந்தியர் கண்விழித்து எழுந்திருக்கவேண்டும் என்று ஆண்டவனின் கட்டளை பிறந்துவிட்டது. இந்தியா எழுச்சி பெற்று முன்னேற்றப் பாதையில்தான் செல்ல வேண்டும் என்று இறைவன் ஆணை பிறப்பித்துவிடடான். பாமரர்களான இந்தியாவின் ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு பெறப்போகிறார்கள்.

❖ மிருகபலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக அமைதி, அன்பு ஆகிய முறைகளின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்.

# பிரகாஷ், ரதன் சிறப்பாட்டம் யங்கம்பன்ஸ் அணி வெற்றி





பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் (31/12/2016) அன்று நடைபெற்ற போட்டியில் உதயதாரகை B அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் A அணி மோதியது.


முதல் பாதியாட்டத்தின் 01 வது நிமிடத்தில் ரதன் கோல் போட்டார். அடுத்த 3வது நிமிடத்தில் பிரகாஷ் கோல் போட்டார். மீண்டும் 10 வது நிமிடத்தில் ரதன் கோல் போட்டு அணியின் கோல் கணக்கை அதிகரித்தார்.

ஆட்டம் தொடர்ந்தது. பிரகாஷ் 13 வது நிமிடத்தில் தனது இரண்டாவது கோலை பதிவு செய்தார். 14/15 வது நிமிடங்களில் இரண்டு கோல்களை போட்டு தனது 4வது கோலை பதிவு செய்தார். ரதன் முதல் பாதியாட்டம் 06:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் 27வது நிமிடத்தில் பிரகாஷ் கோல் போட்டு அணியின் கோல் கணக்கை 7 என அதிகரிக்க இறுதியாட்ட நேர முடிவில் 7:0 என்ற ரீதியில் உதய தாரகை அணியை வெற்றியீட்டியது. யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன்–04, பிரகாஷ்–03 கோல் போட்டனர்.

ஆட்டநாயகனாக யங்கம்பன்ஸ் அணிவீரர் பிரகாஷ் தெரிவு செய்யப்பட்டார். (சு)

# ரொனால்டோவின் கடின உழைப்பு எனக்கு உத்வேகம் அளித்தது-கோலி





. கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கடின உழைப்பினால் அதிக அளவில் உத்வேகம் அடைந்துள்ளேன் என்று இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி கூறியுள்ளார்.

கால்பந்து உலகில் கொடிகட்டிப் பறப்பவர் போர்ச்சுக்கல் நாட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ. ஸ்பெயின் நாட்டின் ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடும் அவர், கடின உழைப்பால் 31 வயதிலும் தலைசிறந்த வீரராக திகழ்ந்து வருகிறார். இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவராக இருக்கும் விராட் கோலி தனது கடின முயற்சியால் தலைசிறந்த வீரராக திகழ்ந்து வருகிறார். தனது கடின உழைப்பிற்கு கிறிஸ்டியானோ ரொனோல்டோவின் கடின உழைப்புதான் உத்வேகம் கொடுத்தது என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து விராட் கோலி மேலும் கூறுகையில்,

"நான் கிறிஸ்டியானோ ரொனால்டோவிடமிருந்து ஏராளமான வகையில் உத்வேகம் பெற்றுள்ளேன். கடின உழைப்பினால் அவர் பல வருடங்களாக முதல் இடத்தில் உள்ளார்.

உலகிலேயே மிகவும் கடினமாக உழைக்கக் கூடியவர் (கடின பயிற்சி) ரொனால்டோதான் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தான் அவர் அந்த இடத்தில் இருக்கிறார். மெஸ்சி ஒரு சிறந்த மேதை. ஆனால், கடின உழைப்பில் ரொனால்டோ அவரை விடச் சிறந்தவர்." என்றார். (சு)

# சிகையலங்கரிப்பாளர் விளையாட்டு கழகத்திற்கு டெனிஸ்வரனால் உதவித்திட்டம்



மன்னார்மாவட்ட சிகையலங்கரிப்பாளர் சங்க விளையாட்டு கழகத்திற்கு அமைச்சர் பா.டெனிஸ்வரனின் 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியில் இருந்து ரூபா 30 ஆயிரம் பெறுமதியான விளையாட்டு சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு 30.12.2016 வெள்ளிக்கிழமையன்று முற்பகல் 11 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போது அவர்களுக்கான விளையாட்டு சீருடையை சங்கத்தின் முன்னாள் தலைவர் பெற்றுக்கொண்டார்.

பலகாலமாக இயங்கிவரும் இவ் விளையாட்டுக் கழகமானது விளையாட்டு சீருடையின்றி போட்டிகளில் பங்குபற்றிவருவது அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் அதற்கான கோரிக்கையும் சங்கத்தினரால் முன்வைக்கப்பட்டது. வருகின்ற மாதம் வடமாகாண சிகையலங்கரிப்பாளர் சம்மேளனத்தினால் மாகாண ரீதியில் நடத்தப்படவிருக்கும் விளையாட்டுப்போட்டியில் தாம் பங்குபற்றுவதற்கு சீருடைகள் தேவையென்ற கோரிக்கையையேற்று அமைச்சரால் குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (சு-312)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

கற்பகச்சோலை இளைய நட்சத்திர விளையாட்டு கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து போட்டிக்கு விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 413 8380 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்துக. (சு)



# முபாதலா டென்னிஸ் நடால் சம்பியன்

முபாதலா உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 4ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். அபுதாபியில் நடந்த விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் பெல்ஜியம் வீரர் டேவிட் காபினுடன் மோதிய நடால் 6-4,7-6 (7-5) என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினார். இந்த தொடரில் அவர் 4ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

மூன்றாவது இடத்துக்கு நடந்த மோதலில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 6-3, 7-6 (8-6) என்ற நேர் செட்களில் மிலோஸ் ரயோனிச்சை (கனடா) வீழ்த்தினார். மணிக்கட்டு காயம் காரணமாக கடந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபன் (2வது சுற்று) மற்றும் விம்பிள்டனில் இருந்து விலகிய நடால், அடுத்து பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடரில் பங்கேற்கிறார். (சு)

# கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

Alvai youth sports club நடத்தவிருக்கும் அணிகளுக்கான Over Game Volleyball சுற்றுப் போட்டி எதிர்வரும் 7,8 ஆம் திகதிகளில் அல்வாய் யூத் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளை விரைந்து முடிக்க வேண்டி இருப்பதால் குறிப்பிட்ட அளவேயான கழகங்களை பதிவு செய்ய ஒழுங்கமைப்பாளர் எண்ணியுள்ளதால் உங்கள் கழகங்களையும் விரைந்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (சு)

## இன்னும் நீதி...

திருகோணமலை நகரில் சீருடையின ரால் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்று நேற்று திங்கட்கிழமையுடன் 10 ஆண்டுகள் முடிவ டைந்த நிலையில் இதுவரையில் நீதி கிடைக்கவில்லை என சமூக ஆர்வலர் களும் மனித உரிமை செயற்பாட்டாளர் களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் உள்நாட்டு யுத்தம் உச்சமடைந்திருந்த வேளை இடம் பெற்றிருந்த இந்த சம்பவமானது மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங் களில் ஒன்று என உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்து பேசப்படுகின்றது.

சர்வதேச மன்னிப்பு சபை உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இலங்கை அரசு மீது வன்மையான கண்ட னத்தை வெளியிட்டிருந்தனர்.

ஐ. நா மனித உரிமை பேரவையிலும் இந்தப் படுகொலை இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்களில் இடம்பெற்று விவாதிக்கப்பட்டி ருந்தது.

திருகோணமலையிலுள்ள பிரபல பாட சாலையொன்றின் மாணவர்களான இவர் கள், பாடசாலை கல்வியை முடித்த பின்னர் பல்கலைக்கழக உயர் கல்விக்கான அனு மதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் என கூறப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி மாலை திருகோணமலை கடற் கரை பகுதியில் பொழுதுபோக்குக்காக கூடியிருந்தவேளை இந்த மாணவர்கள் ஆட்டோவொன்றில் வந்த ஆயுததாரிகளி னால் அழைத்துச் செல்லப்பட்டு காந்தி சிலை சுற்று வட்டத்துக்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2006ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த இந்த படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் எவரும் உடனடியாக கைது செய்யப்படவில்லை .

கடந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் சர்வதேச ரீதியான அழுத்தங்கள் காரண மாக 7 வருடங்களின் பின்னரே அதாவது 2013ஆம் ஆண்டுதான் சிறப்பு அதிரடிப் படையை சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட் சகரொருவர் உட்பட 12 பேர் குற்றப்புலனாய் வுத் துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை நீதவான் நீதிமன்றத் தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது

குறித்த மாணவர்களில் ஒருவரது குடும் பத்தை தவிர்ந்த ஏனையோரின் குடும்பங் கள் உட்பட அநேகமான சாட்சிகள் தமது பாதுகாப்பு நிமித்தம் தற்போது நாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

சம்பவம் இடம்பெற்று 10 வருடங்கள் கடந்து விட்டாலும் திருகோணமலை மாவட் டத்தில் இடம்பெற்ற மனித படுகொலை சம்பங்களில் இந்நிகழ்வும் மறக்க முடியாத ஒரு அத்தியாயமாகவே மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலராலும் கருதப்படுகின்றது. (இ-11)

## இலங்கை மக்கள்...

இலங்கை மக்கள் தமது காணிகளை மீட்டெடுக்க வெளிநாட்டவருடன் போராட வேண்டியேற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய ஆனந்த போதி விகாரையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் என்பது சிறிய பரப்பளவல்ல. தற்போது 5 ஆயிரம் ஏக்கர் என்கின்றனர். மீதமுள்ள காணிகள் எம்பிலிப்பிட்டிய மற்றும் மொன ராகலையில் வழங்கி உள்ளனராம்.

துறைமுகம், விமான நிலையம், விளை யாட்டு மைதானம், வீதிகள் செப்பனிடாம லும் நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படா மல் இருந்திருந்தால் மக்களின் காணிகளை காப்பாற்றியிருக்கலாம் என்று எனக்கு எண்ண தோன்றுகிறது எனவும் முன்னாள் ஜனாதி பதி மேலும் தெரிவித்தார். (இ-11)

## அரசுக்கு எதிராக...



அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுக வளாகத்தில் ஐயாயிரம் ஏக்கர் காணியை சீன முதலீட்டு வலயமாக மாற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து 500க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் கொட்டும் மழையிலும் தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

அம்பாந்தோட்டை - அம்பலாந்தோட்டையில் உள்ள ஜயவர்தனா ராமய விகாரை வளாகத்தில் நேற்றைய தினம் ஒன்றுகூடிய பெருந்திரளான பௌத்த பிக்குகள், அங்கிருந்து பேரணியாக 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மிரிச்சவில சந்தி வரை சென்றனர்.

பௌத்த சமயத்தின் நாமமான சாது என்ற பெயரை உரத்த தொனியில் ஒலிக்கச் செய்தும், பௌத்த கொடிகள் மற்றும் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறும் பிக்குகள் இந்த போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

பௌத்த பிக்குகளின் பேரணியினால் கதிர்காமம் - மாத்தறை பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் சுமார் ஒரு மணிநேரத்திற்கும் அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தன.

அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுக வளாகத்தில் தெரிவுசெய்யப்பட்ட 5000 ஏக்கர் காணியில் சீனா முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 7ஆம் திகதி கைச்சாத்திடவுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், நல்லாட்சி அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் அந்த நிகழ்வை பகிஷ்கரிக்கப் போவதாக அம்பாந்தோட்டை - திஸ்ஸமஹராம சந்தகிரி உபய மஜமகா விகாரையின் தலைமைப் பிக்குவான மாத் தற கந்தபட தேரர் மற்றும் அம்பாந்தோட்டை - தெதிசாவே மகாநாயகர் கலாநிதி தேவாலேகம தம்மசேன தேரர் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இதன்போது உரையாற்றிய வெலிகத்த ரஜமகா விகாரையின் தலைமைப் பிக்குவான பெரகம ஞானதிலக தேரர், ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையிலான ஒருவாரகாலப் பகுதியை தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்வதாகவும் அறிவித்தார்.

முழு அம்பாந்தோட்டை மக்களும் நல்லாட்சி அரசாங்கத்தின் காணி விற்பனை செயற்திட்டத்திற்கும், தேசத்துரோகச் செயலுக்கும் கட்சி பேதமின்றி எதிர்ப்பு வெளியிடுவதாகவும் தேரர் தெரிவித்தார்.

மாத்தறை பீடத்தின் நெதிகம்வில ரஜமகா விகாராதிபதி உயன்வத்தே சத்தாராம, கல்வில ரஜமகா விகாரையின் தலைமைப்பிக்கு பெரகம விமல புத்தி தேரர், பதில் விகாராதிபதி பெரகம விமலநாத தேரர், தங்காலை வஜிரகிரி விகாரையின் தலைமைப்பிக்கு கலாநிதி மிரிஸ்ஸே தம்மவங்ச தேரர் உட்பட அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பிரதான விகாரைகளிலுள்ள பிக்கு கள, பிக்கு மாணவர்கள், பிரதேசவாசிகள் எனப் பலரும் இந்தப் பேரணி யில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (இ-11)

## நல்லிணக்கத்துடன்...

கொழும்பில் நேற்று காலை இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அரசாங்கம் கடந்த ஈராண்டுகளில் நெருக்கடியான பயணத்தை மேற்கொண்டி ருந்தாலும், பல்வேறு வெற்றிகளைப் பெற் றுள்ளது.

இதேவேளை, அரசியல் யாப்பு மறுசீர மைப்பு அவசரமாக மேற்கொள்ளப்படமாட் டாது. எனவே, சில தரப்பினர் தெரிவிக்கும் கருத்துக்களைக் கொண்டு மக்கள் குழப்பம் அடையத் தேவையில்லை.

சகல கட்சிகளும் சுதந்திரமாக தமது கருத் துக்களை தெரிவிக்கக்கூடிய ஜனநாயகம் இன்று நாட்டில் நிலவுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (இ-11)

## 51 தமிழக மீனவர்கள்...

இந்தியாவின் மத்திய விவசாயம் மற்றும் மீனவளத் துறை அமைச்சர் ராதா மோகன் சிங் மற்றும் இலங்கை அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தைக்கு பிறகு இருநாட்டு அமைச் சர்களும் கூட்டாக அறிக்கை வெளியிட்ட னர்.

இந்த பேச்சுவார்த்தையில் நீண்ட காலமாக இருநாட்டு சிறைகளிலும் வாடும் மீனவர்களை பரஸ்பரம் விடுதலை செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. அதேபோல் படகுகளையும் விடுவிக்க இருநாட்டு தரப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதில், இலங்கை சிறையில் உள்ள 51 தமிழக மீனவர்களை விடுவிக்க முடிவு செய் யப்பட்டுள்ளது. இந்தியா தரப்பில் இலங்கை மீனவர்கள் மூன்று பேர் விடுதலை செய்யப் பட உள்ளனர்.

முன்னதாக, இலங்கை சிறையில் உள்ள 51 தமிழக மீனவர்களை விடுவிக்க வேண் டும் என தமிழக அரசு சார்பில் பிரதமர் நரேந் திர மோடிக்கு கோரிக்கை வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கூட்டு நடவடிக்கை குழுவின் முதல் கூட்டம் கடந்த டிசம்பர் 31ஆம் திகதி புது டில்லியில் நடைபெற்றது. இதனை தொடர் ந்து அடுத்த கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் 17ஆம் திகதி கொழும்பு நகரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-11)

## மகிந்த தலைமையில்...

அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன் பெர முன கட்சியின் தலைவருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளே தற்போது செயற்படுத்தப் படுகின்றன. இதனால், மாற்றம் தேவை என்ற நிலை சமூகத்தில் ஏற்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கே தற்போது நாட் டில் சந்தர்ப்பம் உள்ளது. எமது கட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் கருவியாக கட்சியை பயன் படுத்துமாறு நாங்கள் முன்னாள் ஜனா திபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அரசாங்கம் பொய்யான காரணங்களை கூறி உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற் போட்டு வருகிறது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு மிக முக்கிய மான ஆண்டு.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், வட மத் திய, சப்ரகமுவ, கிழக்கு ஆகிய மாகாணங் களில் தேர்தல்கள் நடக்க உள்ளன. இந்தத் தேர் தல்களை நாங்கள் மகிந்த ராஜபக்ஷ தலை மையில் சந்தித்து வெற்றி பெறுவோம் என வும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (இ-11)

## போதைப்பொருள்...

சேன தெரிவித்துள்ளார்.

நிலையான அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட அரசாங்கத்தின் விசேட செயற் றிட்டம் தொடர்பான நிகழ்வொன்று ஜனாதி பதி செயலகத்தில் நேற்றுக் காலை இடம் பெற்றது. இதில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

தொற்றாநோய் மற்றும் போதைப்பொருள் ஆகியவற்றால் இலங்கையும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக ஜனாதிபதி தெரி வித்தார்.

இதேவேளை, நிலையான அபிவிருத் தியை ஏற்படுத்த வேண்டுமாயின், பூகோள நிலைமைகள் குறித்து ஆராய வேண்டும். இதனூடாக எமது நாட்டுக்குப் பொருத்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்த கவனம் செலுத்த வேண்டும்.

இயற்கை வளங்களைப் பாதுகாத்து, பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வத னூடாகவே நிலையான அபிவிருத்தியை அடைய முடியும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-11)

## பலசவால்கள் இருந்தாலும்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று பிரதமர் அலுவலகத்தில் புத் தாண்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனை தெரி வித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் இந்த ஆண்டு வீழ்த்தப்படுமென்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் கருத்துக் களை தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் விக்கிரமசிங்க, தான் ஒரு வாரத்திற்கு சுவிஸ் நாட்டில் விஜயமொன்று மேற்கொள்ள வுள்ளதாகவும்

முடிந்தால் அந்த காலப்பகுதிக்குள் பிரத மர் பதவியை பெற்றுக் கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்க சவாலொன்றை விடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு தான் விரும்பியதை செய்ய முடியுமென்று தெரிவித்துள்ள பிரதமர், பல சவால்கள் விடுக்கப்பட்ட போதிலும் தானே தொடர்ந்து பிரதமராக செயல்பட போவதாக மேலும் தெரிவித்துள்ளார். (இ-11)

# உத்தரவுகளை கண்டிப்பாக பின்பற்றுவது முக்கியம்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களை இராணுவத்தினர் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என இராணுவத் தளபதி லெப்ரி னன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் கண்ணியத்தை பாதுகாத்தல், வறுமையை ஒழிக்கும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவ தற்கான அர்ப்பணிப்பு, தொடர்ச்சியான அர்ப் பணிப்புள்ள விசுவாசம், நாட்டின் செழிப்புக் கான அர்ப்பணிப்பு, அனைத்து மட்டங்க ளிலும் உயர்மட்டத்தில் ஒழுக்கத்தை உறுதி செய்தல், சிறந்த தொழில் தரத்தை எட்டுதல் ஆகியன குறித்தே 2017 ஆம் ஆண்டில் இராணுவம் கவனம் செலுத்தியுள்ளதாக இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா குறிப்பிட்டார்.

புத்தாண்டில் முதல் நாள் பணிகளை குறிக்கும் வகையில் நேற்றுக் காலை இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இராணுவத் தளபதி இந்த விட யங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். வழிகாட் டல் மற்றும் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை யும் லெப்ரினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் நிதியை உரிய முறை யில் செலவு செய்வதற்கான பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாகவும் இராணுவ தளபதி சுட்டிக்காட்டியுள்ளார். பொதுமக்க ளின் சிறந்த நலன்களுக்காக படையினர் தமது சிறந்த திறமையை வெளிப்படுத்த வேண டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (இ-11)

## ஓமந்தையில்...

மாமனார் வீட்டின் அருகில் உள்ள தோட்டத்தில் வேலை செய்து கொண்டு நின்றுள்ளார். கணவன் வேலை நிமிர்த்தம் கிளிநொச்சிக்கு சென்றிருந்தார்.

இதன்போது குறித்த தாயும், மகனும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்துள்ளனர்.

கிராம அலுவலர் அலுவலகத்திற்கு சென்ற மாமியார் முற்பகல் 11 மணியளவில் சிறுவனுக்கு ஜெலி வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது தாயையும், மகனையும் காணவில்லை. இதனையடுத்து அவர்களை தேடிய போதே அவர்களது சடலம் வீட்டில் இருந்த கிணற்றில் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சமபவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த சதீஸ்வரன் சுதாசினி வயது 30), சதீஸ்வரன் டினோஸன் (வயது 07) என்பவர்களாவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-15,60,250)

## முன்னாள் போராளி...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள ஜனநாயக போராளிகள் கட்சியின் அலுவலகத்திலேயே தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போராளியாக இருந்து, புனர்வாழ்வின் பின் சாவகச்சேரி டச்சு வீதியில் குடும்பத்தினருடன் வசித்து வந்த ரிசிகரன் சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியில் வீடு ஒன்றில் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கான அலுவலகம் ஒன்றினை உருவாக்கியிருந்தார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த அலுவலகதின் காவலாளி இரவுக்கடமைக்காக சென்றபோது ரிசிகரன் அலுவலகம் அமைந்திருந்த வீட்டுக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-4,85,89)

## 3 பிள்ளைகளின்...

கோபுரம் மூன்றாம் திட்டம் தேராவில் பகுதியைச் சேர்ந்த அம்பிகைபாலன் ஜெகதீஸ்வரி (வயது 32) என்பவரே தற்கொலை செய்துள்ளார்.

தற்கொலை செய்யும் முன் அவர் எழுதியதாக சந்தேகிப்படும் கடிதம் ஒன்றும் காணப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் கணவன் கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் அவர் திரும்பி வரவில்லை எனவும் தனது காணியை விற்று தான் பெற்ற கடன்களை செலுத்துமாறும், தனது இறுதி கிரியைகள் முடிந்ததும் பிள்ளைகளை சிறுவர் விடுதியில் சேர்த்து விடுமாறும் எழுதப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கணவனால் கைவிடப்பட்டுள்ள குறித்த பெண்ணுக்கு 12 மற்றும் 3 வயதில் பெண் பிள்ளைகளும், எட்டு வயதில் ஒரு மகனும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. புதுகுடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (இ-312)

## யாழ்.வரும்...

கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களது வாக்குப் பலத்துடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன தற்போது அரசியல் யாப்பினை மல்வத்த பீடாதிபதிகளிடம் முன்வைத்து அங்கீகாரம் பெறப்போவதாக தெரிவித்துள்ளார். இது தமிழ் மக்களது வாக்குகளை பெற்று ஆட்சிக்கதிரை ஏறும் போது மைத்திரிபால சிறிசேனவிற்கு தெரிந்திருக்கவில்லையா.

மேலும் தனித்தமிழீழத்திற்கு ஆணை கேட்டு வெற்றி பெற்று பின்னர் மாவட்ட சபையுடன் அடங்கிப்போன முன்னாள் கூட்டணி தலைவர் அமிர்தலிங்கம் போன்றவர்களிற்கு பின்னர் நடந்ததை தற்போதுள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவேண்டுமெனவும் சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகத்தின் விளைவுதான் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்க காரணமாக இருந்தது. இந்த தவறை தற்போதுள்ள கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இழைக்கமாட்டார்களென நம்புகின்றேன்.

இந்த அரசியல் யாப்பினில் தமிழ் மக்களது விருப்பங்கள் நிறைவேறுகின்றதா வென்பது முக்கியமாக அவதானிக்கப்படவேண்டும். இதைவிடுத்து சுரேஷ் பிறேமச்சந்திரன் சொல்வது போல் தமிழ் இனத்திற்கு துரோகம் இழைக்கும் நடவடிக்கையினில் கூட்டமைப்பினர் ஈடுபட்டுவிட்டு பின்னர் வருந்துவதில் பயனில்லை.

இந்த அரசின் உத்தேச அரசியல் யாப்பிற்கு ஆதரவளித்தோ மென்றால் அது வரலாற்று துரோகமாகிவிடும். அத்துடன் இவ்வளவு காலமும் எமது மக்கள், இளைஞர்கள் ஆயிரமாயிரமாக போராடி செய்த தியாகங்க ளிற்கு ஏதுமே இல்லாதாகிவிடுமெனவும் சிவாஜிலிங் கம் மேலும் தெரிவித்தார். (செ-4)


### விற்பனைக்கு

குளிர்சாதனப்பெட்டி-02, கண்ணாடி அலுமாரி - 02, கவுண்டர் - 01, சாப்பாட்டு மேசை - 5செற், மோட்டார் ஆகிய பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0765635711 (7357)

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்தீட

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

### வேலை ஆட்கள் தேவை

S.L. Desings புடவைக் கடைக்கு வேலை ஆட்கள் தேவை.
(பெண்கள் மட்டும்)
தொடர்பு:-
NO.214/3 இராமநாதன் வீதி.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
021 221 2503
(7360)

### FRENCH LANGUAGE CENTRE

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(C-6921)

### V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-6930)

### யாழ் REGISTER NOW!

Java Programming Classess with practicals
weekdays 9-11am 7-9 pm
weekends 9-12am 8-9.30 pm
0777861677
(C-7058)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொழிற்துறைக் கணக்காளர் கற்கை நெறிகள்
aat [Sri Lanka]
[AA1, AA2, AA3
Qualification:- G.C.E O/L 6 Passes
(Medium Tamil & English)

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L Passes with 5 credit passes including mathamatics

பட்டயக்கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accountant Courses
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes

Gr 9, Gr 10, & G.C.E O/L English literature Classes
CERTIFICATE COURSE IN ENGLISH

Further Details:
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382 / 021 222 9149
(C-6832)

### "புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு"

ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
A/L 2019 A/L DAY CLASS
■கலை ■வர்த்தகம் ■தொழில்நுட்பம்
ஆரம்பம்:-08.01.2017
ஞாயிறு காலை 9.00 மணி அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
-நிர்வாகம்
(7314)

### தேவை

வடமராட்சி பருத்தித்துறையில் கட்டிட வேலைகளிற்கான மேசன் மற்றும் கூலியாட்கள் தேவைப்படுகின்றனர்.

குறிப்பு : தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு
0777795904, 0770275845

### பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு

01.Cashier (Part Time & Full time)
02.Showroom Marketing Sales & Executives. (Boys) (Computer அனுபவமுள்ளவர்கள்)
03.Driver (Heavy Vehicle License)

விரும்பத்தக்கது: ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

KINGS ELECTRONICS (PVT) LTD
No.12, Pointpedro Road, Jaffna.
T.P:- 021 454 6699
(இ-7064)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

### 60-வது அகவையில் வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிறுவனங்களின் கணித ஆசான்
திரு.அ.ஜெயதாசன்
(ஜெயம் ஆசிரியர்)
அவர்கள் இன்று தனது 60-வது அகவையில் கால்பதிக்கின்றார். அவரது கல்விப்பணி தொடர வாழ்த்துகின்றோம்.
- நிர்வாகி, சக ஆசிரியர்கள், மாணவர்கள்
(7359)
UNIVERSAL, கந்தர்மடம். SCIENCE GUIDE CENTRE, இராசாவின்தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.

### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

கட்டடம் கட்டுவதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தின் அலுவலக கட்டடம் கட்டுவதற்காக ஆர்வம் உள்ள சிறிய கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டடம் சம்பந்தமான விபரங்களை அறிய கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி - 10.01.2017

தலைவர் : 021 225 5703
செயலாளர் : 077665 3323
செயலாளர்
கா.பாஸ்கரன்
(இ-7069)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.